# சாரீர மர்ம விஜ்ஞானம்

வெளியிடுபவர் :

வைத்யவிசாரத S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி.

திருச்சிராப்பள்ளி.

★

தொகுத்தவர் :


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

சின்னக்கடைத் தெரு, திருச்சிராப்பள்ளி

1964

விலை ரூ. 1-00

ஸ்ரீ:

# சாரீர மர்ம விக்ஞானம்.

## 1. மர்மங்கள்

மர்மம் எனும் சொல் ஜீவஸ்தானம், பூட்டு என்ற பொருளில் வழங்கப்படும். ஜீவனுக்கு-உயிருக்கு இருப்பிடம் எனும்போது உயிர் இவ்விடத்தில் பாதுகாக்கப்படவேண்டியது; உயிர் இவ்விடங்களிலே விசேஷித்துக் கட்டுப்பட்டிருக்கிறது; [1] இவ்விடங்களிலே ஏற்படும் அடிமுதலியவை மரணம் ஈறான கெடுதல்களை அளிக்கவல்லவை [2] என்று இதை விரித்துக் கூறலாம். சரீரத்தின் மற்ற உறுப்புகளில் ஏற்படும் நோய்களும் அடிமுதலிய தாக்குதல்களும் ஏற்படுத்தும் கெடுதல்களைவிடப் பன்மடங்கு கெடுதல்களை துரிதமாக இந்த மர்மஸ்தானங்களில் ஏற்படும் நோய்களும் அடி முதலியவையும் ஏற்படுத்தும். அதனால் நோய்கள் ஏற்படாமலும் அடி முதலியவை படாமலும் இவ்விடங்கள் பாதுகாக்கப் படவேண்டியவை. இந்தப் பொருளே பொது வழக்கில் கூடப் பரவி, மர்மம் என்றாலே கவனமாகப் பாதுகாக்கப் படவேண்டியது, ரஹஸ்யமாக வைத்துக்கொள்ளவேண்டியது, மறைக்கப்பட வேண்டியது என்று பொருள் கூறப்படுகின்றது.

சல்ய முறையில் இந்த ஸ்தானங்களுக்குத் தனி இடமுண்டு.[3] சல்ய சிகித்ஸை செய்யும் போது இவ்விடங்களில் பக்கவாட்டில்

---

1. तेषामन्यतमपीडायां समधिका पीडा भवति।
चेतनानिबन्धवैशेष्यात्। (சரக-ஸித்தி. 9 அ.)

2. मारयन्तीति मर्माणि (ஸுச்ருத சாரீர. 9 அ. உரை)
म्रियतेऽस्मिन्नंगे उपहते इति मर्म। (அ-ஹ்ரு, சா. 4. அத்)

3. एतत्प्रमाणमभिवीक्ष्य वदन्ति तज्ज्ञाः
शस्त्रेण कर्मकरणं परिहृत्य कार्यम्।
पार्श्वाभिघाततमपीह निहन्ति मर्म
तस्माद्धि मर्मसदनं परिवर्जनीयम्॥ (ஸுச்ருத-சாரீர. 6)

கூட சஸ்திரங்கள் படாதவகையில் மர்மங்களை விலக்கியே மற்ற விடங்களில் சஸ்திர சிகித்ஸை செய்யப்படவேண்டும். மர்மங்களின் உறுவமைப்பையும் அளவையும் அறிவது சஸ்திர சிகித்ஸை செய்பவனுக்கு மிக முக்கியமாகும். இவ்வறிவைப் பெற்ற பின்னரே சஸ்திரசிகித்ஸைக்குத் தகுதிபெறுகிறுன். க்ஷாரங்களாலோ நெருப்பாலோ சுட்டுச் சிகித்ஸை செய்யும்போதும் இவ்விடங்கள் கவனிக்கப்பட்டு விலக்கப்பட வேண்டியிருக்கின்றன.[1] அங்கேயே சஸ்திர சிகித்ஸை செய்யும்படி நேரிட்டால் மிகக்கவனத்துடன் தக்க உபகரணங்களுடன் சிகித்ஸை புரியவேண்டும். மர்மங்களில் சிறிய அளவில் ஏற்படும் அடி முதலியவைகூட மிகக்கெடுதி விளைவிக்கவல்லவை. மர்மங்களில் ஏற்படும் சிறிய நோய்களும் நல்ல சிகித்ஸை யளித்தும் உபத்திரவப்படுத்தும்.[2] அதனால் சல்ய சிகித்ஸை நூல்களில் மர்மங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

வியாதிகளை அறுவை, சுடுதல் முதலியவைகளால் எளிதாக குணப்படுத்துவதாலேயே சஸ்திரசிகித்ஸைக்கு அன்றும் இன்றும் பெருமை. அதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய பகுதி மர்மங்கள். ஆக மர்ம விக்ஞானம் சல்ய சிகித்ஸையின் பாதி அளவு பெருமையைப் பற்றிக்கொண்டு விடுகிறது. சஸ்திர சிகித்ஸை எவ்வளவு நல்ல உபாயமோ அவ்வளவு அதில் அபாயமும் உள்ளது. மர்மங்களில் ஏற்படும் தாக்கு மரணம்வரையிலுள்ள கேடுகளை விளைவிக்கக்கூடியது. வைத்யனின் திறமை காரணமாக மரணத்தைத் தவிர்க்க முடிந்தாலும் உடலில் ஏற்படும் தளர்ச்சியும் ஊனமும் மிகக் கடுமையாக இருக்கும்.[3]

1. तस्मात्क्षारविषाग्न्यादीन् यत्नान्मर्मसु वर्जयेत् । (அ-ஹ்ரு. சா. 4)

2. मर्माभिघातः स्वल्पोऽपि प्रायशो बाधतेतराम् ।
रोगा मर्माश्रयास्तद्वत्प्रक्रान्ता यत्नतोऽपि च । (அ-ஹ்ரு, சா. 4)

3 मर्माणि शल्यविषयार्धमुदाहरन्ति
यस्माच्च मर्मसु हता न भवन्ति सद्यः ।
जीवन्ति तत्र यदि वैद्यगुणेन केचि-
त्ते प्राप्नुवन्ति विकलत्वमसंशयं हि ॥ (ஸு. சா. 6 அத்)

சிலருக்குக் கடுமையான அடிபட்டு மண்டைஓடு நொறுங்கியும் பொசுக்கப்பட்டும் எலும்புகள் தூளாக்கப்பட்டும் வயிறு முதலியவை கிழிக்கப்பட்டும் அங்கச்சிதைவு ஏற்பட்டும்கூட பிழைத்திருப்பதைப் பார்க்கிறோம். சிலருக்குச் சில விடங்களில் லேசான அடிபட்டால்கூட மூர்ச்சை-மரணம் ஏற்படுவதையும் பார்க்கிறோம். அதனால் அடி முதலியவை ஏற்படும் விதத்தையோ கடுமையையோவிட அவை ஏற்படும் இடத்தைப் பொறுத்தே கடுமையான உபத்திரவங்கள் ஏற்படுகின்றன. இவ்விடங்களைப்பற்றிய அறிவு மிக அவசியமாகின்றது.[1]

## 2. மர்மங்களின் அமைப்பு

உடற்கூறு அமைந்துள்ள விதத்தில் சில விடங்களில் தசை, சிரை, தசைநார், எலும்பு பூட்டு இவை ஒன்றுகூடுமிடம் மர்மஸ்தானமாக அமைகின்றது. அங்கு ஜீவசக்தி நன்கு நிலைத்துள்ளது.[2] இவ்விடங்கள் மர்மஸ்தானமாக அமைந்திருப்பது

---

प्राणघातिनि जीवेत्तु कश्चिद्वैद्यगुणेन चेत् ।
असमग्राभिघाताच्च सोऽपि वैकल्यमश्नुते ।
तस्मात्क्षारविषाग्न्यादीन् यत्नान्मर्मसु वर्जयेत् ॥ (அ-ஹ்ரு. சா 4)


1. संभिन्नजर्जरितकोष्ठशिरःकपालाः
जीवन्ति शस्त्रनिहतैश्च शरीरदेशैः ।
छिन्नैश्च सक्थिभुजपादकरैः अशेषैः
येषां न मर्मसु कृता विविधाः प्रहाराः ॥ (ஸு. சா)
सुविक्षतोऽप्यतो जीवेदमर्मणि न मर्मणि । (அ-ஹ்ரு. சா.)

2. मर्माणि मांससिरास्नाय्वस्थिसन्धिसन्निपाताः ।
तेषु स्वभावत एव विशेषेण प्राणास्तिष्ठन्ति ।
तस्मान्मर्मस्वभिहतास्तांस्तान् भावानापद्यन्ते । (ஸு. சா.)
मांसास्थिस्नायुधमनीसिरासन्धिसमागमः ।
स्यान्मर्मेति च तेनात्र सुतरां जीवितं स्थितम् ॥ (அ-ஹ்ரு. சா.)
तत्पुनर्मांससिरास्नाय्वस्थिसन्धिसन्निपातः,
बाहुल्येन तु निर्देशः। (அ-ஸம். சா.)

அஷ்டாங்க ஹ்ருதயத்தில் தமனியையும் சேர்த்துள்ளது கவனிக்கத்தக்கது. தமனீ மர்மங்கள் என்ற பிரிவு இதில் புதிது. தசை சிரை தசை

# மர்மங்கள் சித்திரம் 1.


## சாகா மர்மங்கள்—கை.




| | | |
|---|---|---|
| (அ) க்ஷிப்ரம், | (ஆ) தலஹ்ருதயம், | (இ) கூர்ச்சசிரஸ், |
| (ஈ) இந்திரபஸ்தி, | (உ) கூர்பரம், | (ஊ) ஆணி, |
| (எ) பாஹ்வீ-உர்வீ, | (ஏ) லோஹிதாக்ஷம், | (ஐ) கக்ஷதரம். |

## மர்மங்கள் சித்திரம் 2.

சாகா மர்மங்கள்—கை.




(அ) கூர்ச்சம், (ஆ) மணிபந்தம், (இ) கூர்பரம்.

இயற்கையின் வேலைப்பாடு. இதே தசை முதலியவை வேறு இடங்களில் கூடியிருந்தும் மர்ம ஸ்தானமில்லாதிருக்கலாம். மர்மங்களுக்கு இந்த மஹத்துவம் ஏற்படக்காரணம் அங்கு இவ்வைந்தைத்தவிர வாதபித்த கபங்களாகிற மூன்று சாரீர தோஷங்களும் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற மூன்று மனோ தோஷங்களும் ஆத்மா எனும் உயிரும் மிக விசேஷ நிலையில் தங்கியிருப்பதே. உயிருக்கு ஆதாரமான இவ்விடத்தில் ஏற்படும் எந்தத் தவறும் உயிருக்கு ஆபத்தாக முடிகிறது.[1]

### 3. மர்மங்களின் பிரிவினை

மர்மங்களின் கூட்டுப்பொருளான தசை, சிரை, தசைநார் எலும்பு, பூட்டு என்ற ஐந்து பொருள்களுக்கேற்ப அந்த இடங்களில் அதனதன் முக்கியத்துவம் உணரப்படுவதற்கேற்ப இம் மர்மங்களையும் ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.[2]

1. மாம்ஸ மர்மம் (தசை முக்கியத்துவம் பெற்றது)
2. சிராமர்மம் (சிரை முக்கியத்துவம் பெற்றது)
3. ஸ்நாயுமர்மம் (தசைநார் முக்கியத்துவம் பெற்றது)
4. ஸந்திமர்மம் (பூட்டு முக்கியத்துவம் பெற்றது)
5. அஸ்திமர்மம் (எலும்பு முக்கியத்துவம் பெற்றது)

இவை 107 ஆகும்.

---

நார் எலும்பு, பூட்டு என்ற ஐந்தைத் தவிர மர்மஸ்தானங்களில் வேறு காணப்படுபவை இவ்வைந்தின் மாற்றுருவமே: அதனால் மற்றவைகளை கணக்கிடவேண்டியதில்லை;

न खलु मांससिरास्नायुसन्ध्यस्थिव्यतिरेकेणान्यानि मर्माणि भवन्ति। यस्मान्नोपलभ्यन्ते। (ஸு. சா.)

என்ற வாக்யம் வாக்படர் சேர்த்துள்ள தமனீமர்மவிஷயத்திலும் பொருந்தும்.

1. सोममारुततेजांसि रजस्सत्वतमांसि च।
मर्मसु प्रायशः पुंसां भूतात्मा चावतिष्ठते।
मर्मस्वभिहतास्तस्मान्न जीवन्ति शरीरिणः। (ஸு. சா.)

2. सप्तोत्तरं मर्मशतं, तानि मर्माणि पञ्चात्मकानि भवन्ति। तद्यथा मांसमर्माणि, सिरामर्माणि, स्नायुमर्माणि, अस्थिमर्माणि, सन्धिमर्माणि चेति।

அஷ்டாங்கஹ்ருதயம் தமனீ மர்மத்தைச் சேர்த்து அறுவகையாகப் பிரித்துள்ளது. 107 என்ற மொத்த எண்ணிக்கை இரண்டிலும் சமானமே.

PAGE NUMBER 7 & 8 MISSING

அவைகளின் பிரிவினை பின்வருமாறு :—

| ஸுச்ருதர் | வழியே* | வாக்படர் | வழியே. |
|---|---|---|---|
| மாம்ஸ மர்மம் | 11 | மாம்ஸ மர்மம் | 10 |
| ஸிரா மர்மம் | 41 | ஸிரா மர்மம் | 37 |
| ஸ்நாயு மர்மம் | 27 | ஸ்நாயு மர்மம் | 23 |
| அஸ்தி மர்மம் | 8 | அஸ்தி மர்மம் | 8 |
| ஸந்தி மர்மம் | 20 | ஸந்தி மர்மம் | 20 |
| | | தமனீமர்மம் | 9 |
| ஆக | 107 | ஆக | 107 |

இப்பிரிவினை மர்மஸ்தானங்களில் முக்கியத்துவம் பெறும் தசைமுதலியவைகளை அடிப்படையாகக் கொண்டது.

இவைகளின் அங்கவாரியாகப் பிரிவினை பின்வருமாறு.†

1. **சாகா மர்மம் :**
   கைகள், கால்கள் ஒவ்வொன்றிலும் 11 - 11 ஆக 44
2. **உதர மர்மம்:**
   வயிற்றில் உள்ளது 3
3. **உரஸ் மர்மம் :**
   மார்பில் உள்ளது 9
4. **பிருஷ்ட மர்மம் :**
   முதுகில் உள்ளது 14
5. **உத்தமாங்க மர்மம் :**
   கழுத்திற்கு மேல் 37

ஆக 107

---

सप्तोत्तरं मर्मशतम्........

बाहुल्येन तु निर्देशः षोढैवं मर्मकल्पना ।

प्राणायतनसामान्यादैक्यं वा मर्मणां मतम् ॥ (அ. ஹ்ரு. சா.)

* तत्रैकादश मांसमर्माणि, एकचत्वारिंशत्सिरामर्माणि, सप्तविंशतिः स्नायुमर्माणि, अष्टावस्थिमर्माणि, विंशतिः सन्धिमर्माणि, तदेतत्सप्तोत्तरं मर्मशतम् । (ஸுச்ருதசாரீரம்.)

† तेषामेकादशैकस्मिन् सक्थ्नि भवन्ति। एतेनेतरसक्थि बाहू च व्याख्यातौ। उदरोरसोर्द्वादश। चतुर्दश पृष्ठे। ग्रीवां प्रत्यूर्ध्वं सप्तत्रिंशत् ॥ (ஸுச்ருத சாரீரம்.)

இவைகளில் அடிபடும்போது உடலில் ஏற்படும் கெடுதியை ஒட்டி இவைகளை மேலும் ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.

**1. ஸத்யஃபிராணஹரம்:–** இவை அக்னி குணம் மிகுந்தவை. அக்னிகுணம் உடன் குறையும்போது உயிர்நீங்கிவிடுகின்றது. இவைகளில் அடிபட்ட உடனேயே ஒருவாரத்திற்குள் மரணம் ஏற்படுகின்றது. இவை 19.[1]

**2. காலாந்தரப்ராணஹரம் :—** இவை ஸோம அக்னி குண முள்ளவை. அக்னிகுணம் உடன் குறைந்தாலும் ஸோமகுணம் குறையும் வரை உயிர் தரித்திருந்து பிரிகிறது. 15 நாள் முதல் ஒரு மாதத்திற்குள் இவைகளில் ஏற்படும் தாக்குதல் மரணத்தை உண்டாக்கும். இவை 33.[2]

**3. விசல்யப்ராணஹரம்:—** இவை வாயு குணம் மிக்கவை. ஆயுதம் முதலியவைகளின் முனை இம்மர்ம இடங்களில் குத்திய பின் அவைகளை உடன் பிடுங்கி எடுக்காமலிருந்தால் முனைக ளால் அடைபட்ட வாயு உள் தங்கியுள்ளவரை உயிர் தங் கும். சல்ய முனை பிடுங்கப்பட்டால் அதன் வழியே வாயு வெளி யாகி உயிர் நீங்கும். அதனால் சல்யம் (குத்திய முள் ஆயுதம் முதலிய) புண்ணிலிருக்கும் வரை உயிருடனிருக்கலாம். அல்லது புண் பழுத்துத் தானே சல்யம் வெளியானாலும் பிழைக்கலாம். சல்யம் நீக்கப்பட்டால் ச்வாஸத்தாலும் காஸத்தாலும் மரணம் ஏற்படும். இவை 3.[3]

---

त्रीणि कोष्ठे नवोरसि. (அ. ஹ்ரு. சாரீரம்)

1. सद्यः प्राणहराण्याग्नेयानि । अग्निगुणेष्वाशुक्षीणेषु क्षपयन्ति ।
सद्यः प्राणहराण्येकोनविंशतिः । (ஸுச்ருத சாரீரம்.)
सप्ताहः परमस्तेषां कालः कालस्य कर्षणे । (அ. ஹ்ரு. சாரீரம்)

2. कालान्तरप्राणहराणि सौम्याग्नेयानि । अग्निगुणेष्वाशु क्षीणेषु, कालान्तरेण क्षपयन्ति । कालान्तरप्राणहराणि त्रयस्त्रिंशत् । (ஸுச்ருதசாரீரம்.)
कालान्तरप्राणहरा मासमासार्धजीविताः । (அ. ஹ்ரு. சா.)

3. त्रीणि विशल्यघ्नानि । विशल्यप्राणहराणि वायव्यानि । शल्यमुखावरुद्धो यावदन्तः वायुस्तिष्ठति तावज्जीवति । उद्धृतमात्रे तु शल्ये मर्म-

**4. வைகல்யகரம்:—** இந்த வகையைச் சேர்ந்தவை ஸோம குணம் மிக்கவை. ஸோம சக்தி திடமும் குளிர்ச்சியுமுள்ள தானதால் இதில் அடிபட உயிர்ச்சேதமேற்படாது. அங்கவீனம் ஏற்படும். மிகச் சில சமயங்களில் இதில் அடிபட்டாலும் உயிர்ச் சேதம் ஏற்படும். இவை 44.*

**5. ருஜாகரம் :—** இந்த வகைய்யைச் சார்ந்த மர்மங்கள் அக்னி-வாயு குணம் மிக்கவை. அக்னியும் வாயுவும் அதிகமாக வலியை உண்டாக்குபவை. இவை 8.†

ஆக உருவமைப்பை ஒட்டி மாம்ஸ மர்மம் முதலிய ஐந்து வகையாகவும் இடத்தை ஒட்டி சாகா மர்மம் முதலிய ஐந்து வகையாகவும் தன்மையை ஒட்டி ஸத்ய:பிராணஹரம் முதலிய ஐந்து வகையாகவும் பிரித்துள்ளனர்.

**மர்மங்களின் பெயர்.**

| **ஒவ்வொரு காலிலு முள்ளவை : 11.** | **ஒவ்வொரு கையிலு முள்ளவை : 11** |
|---|---|
| க்ஷிப்ரம் | க்ஷிப்ரம் |
| தலஹ்ருதயம் | தலஹ்ருதயம் |
| கூர்ச்சம் | கூர்ச்சம் |
| கூர்ச்ச சிரஸ் | கூர்ச்ச சிரஸ் |
| குல்பம் | மணிபந்தம் |
| இந்திரபஸ்தி | இந்திரபஸ்தி |
| ஜாநு | கூர்பரம் |
| ஆணீ | ஆணீ |

स्थानाश्रितो वायुर्निष्क्रामति। तस्मात्सशल्यो जीवति। उद्धृतशल्यो म्रियते। पाकात्पतितशल्यो वा जीवति। (ஸுச்ருத சாரீரம்.)

शल्यापाये विनिर्गच्छन् श्वासात्कासाच्च हन्त्यसून्। (அ. ஹ்ரு. சாரீரம்)

* वैकल्यकराणि सौम्यानि। सोमो हि स्थिरत्वाच्छैत्याच्च प्राणावलम्बनं करोति। चतुश्चत्वारिंशद्वैकल्यकराणि। (ஸுச்ருதசாரீரம்.)

हरन्ति तान्यपि प्राणान्कदाचिदभिघाततः। (அ. ஹ்ரு. சாரீரம்.)

† रुजाकराण्यग्निवायुगुणभूयिष्ठानि। विशेषतश्च तौ रुजाकरौ। (ஸுச்ருதசாரீரம்.)

| | |
|---|---|
| உர்வீ | உர்வீ |
| லோஹிதாக்ஷம் | லோஹிதாக்ஷம் |
| விடபம் | கக்ஷதரம் |

**உதரத்தில் உள்ளவை :— 3**

| | |
|---|---|
| குதம் | நாபி |
| பஸ்தி | |

**மார்பில் உள்ளவை :— 9**

| | |
|---|---|
| ஹிருதயம் | அபலாபங்கள் (2) |
| ஸ்தந மூலம் (2) | அபஸ்தம்பங்கள் (2) |
| ஸ்தந ரோஹிதம் (2) | |

**முதுகில் உள்ளவை :— 14**

| | |
|---|---|
| கடீகதருணம் (2) | பிருஹதீ (2) |
| குகுந்தரம் (2) | அம்ஸபலகம் (2) |
| நிதம்பம் (2) | அம்ஸம் (2) |
| பார்ச்வ ஸந்தி (2) | |

**கழுத்திற்கு மேலுள்ளவை :— 37.**

| | |
|---|---|
| மந்யாதமனீ 2 | ஆவர்தம் 2 |
| நீலாதமனீ 2 | உத்க்ஷேபம் 2 |
| மாத்ருகா 8 | சங்கம் 2 |
| கிருகாடிகா 2 | ஸ்தபனீ |
| விதுரம் 2 | ஸீமந்தம் 5 |
| பணம் 2 | சிருங்காடகம் 4 |
| அபாங்கம் 2 | அதிபதி |

**மாம்ஸ மர்மங்கள் :— 11.**

| | |
|---|---|
| தலஹ்ருதயம் 4 | குதம் |
| இந்திரபஸ்தி 4 | ஸ்தனரோஹிதம் 2 |

**ஸிரா மர்மங்கள் : - 41.**

| | |
|---|---|
| நீலாதமநீ 2 | ஸ்தநமூலம் 2 |
| மந்யாதமநீ 2 | அபலாபம் 2 |
| மாத்ருகா 8 | அபஸ்தம்பம் 2 |
| சிருங்காடகம் 4 | ஹ்ருதயம் |
| அபாங்கம் 2 | நாபி |
| ஸ்தபநீ | பார்ச்வ ஸந்தி 2 |
| பணம் 2 | பிருஹதீ 2 |
| லோஹிதாக்ஷம் 4 | உர்வீ 4 |

*** ஸ்நாயு மர்மங்கள் :— 27**

| | |
|---|---|
| ஆணீ 4 | பஸ்தி 1 |
| விடபம் 2 | க்ஷிப்ரம் 4 |
| கக்ஷதரம் 2 | அம்ஸம் 2 |
| கூர்ச்சம் 4 | விதுரம் 2 |
| கூர்ச்ச சிரஸ் 4 | உத்க்ஷேபம் 2 |

**அஸ்தி மர்மங்கள் ; 8.**

| | |
|---|---|
| கடீகதருணம் 2 | அம்ஸபலகம் 2 |
| நிதம்பம் 2 | சங்கம் 2 |

**ஸந்தி மர்மங்கள் : 20.**

| | |
|---|---|
| ஜாநு 2 | மணிபந்தம் 2 |
| கூர்பரம் 2 | குகுந்தரம் 2 |
| ஸீமந்தம் 5 | ஆவர்த்தம் 2 |
| அதிபதி 1 | கிருகாடிகா 2 |
| குல்பம் 2 | |

**ஸத்யஃபிராணஹரங்கள் :— 19**

| | | |
|---|---|---|
| சிருங்காடகம் | 4 | ஹிருதயம் |
| அதிபதி | | பஸ்தி |
| சங்கம் | 2 | நாபி |
| மாத்ருகா | 8 | குதம் |

**காலாந்தர ப்ராணஹரங்கள் :— 33**

| | | | |
|---|---|---|---|
| ஸ்தந மூலம் | 2 | க்ஷிப்ரம் | 4 |
| ஸ்தநரோஹிதம் | 2 | இந்திரபஸ்தி | 4 |
| அபலாபம் | 2 | கடீகதருணம் | 2 |
| அபஸ்தம்பம் | 2 | பார்ச்வஸந்தி | 2 |
| ஸீமந்தம் | 5 | பிருஹதி | 2 |
| தலஹ்ருதயம் | 4 | நிதம்பம் | 2 |

**விசல்யக்னம் :— 3**

| | | | |
|---|---|---|---|
| உத்க்ஷேபம் | 2 | ஸ்தபநீ | 1 |

* இவைகளில் குதம், 1. அபஸ்தம்பம் 2. விதுரம் 2. சிருங்காடகம் 4, இவை ஒன்பதையும் தமனீ மர்மங்கள் என அஷ்டாங்கஹ்ருதயம் கூறுகிறது.

**வைகல்யகாம் :— 44**

| | | | |
|---|---|---|---|
| லோஹிதாக்ஷம் | 4 | கூர்ச்சம் | 4 |
| ஆணீ | 4 | விடபம் | 2 |
| ஜாது | 2 | கூர்பரம் | 2 |
| உர்வீ | 4 | அம்ஸபலகம் | 2 |
| குகுந்தரம் | 2 | அபாங்கம் | 2 |
| கக்ஷதரம் | 2 | நீலாதமநீ | 2 |
| விதுரம் | 2 | மந்யாதமநீ | 2 |
| கிருகாடிகா | 2 | பணம் | 2 |
| அம்ஸம் | 2 | ஆவர்த்தம் | 2 |

**ருஜாகரம் :— 8**

| | | | |
|---|---|---|---|
| குல்பம் | 2 | கூர்ச்சசிரஸ் | 4 |
| மணிபந்தம் | 2 | | |

இந்த மர்மங்களில் அடிபட்டால் ஏற்படும் வேதனைகள் பின்வருமாறு—

தலைசுற்றுதல், பிதற்றல், கீழே விழுதல், மயக்கம், அசைவற்றுக் கிடத்தல், ஆழ்ந்த தூக்கத்திலிருப்பது போல மனம் வேலை செய்யாதிருத்தல், அடிபட்ட இடத்தில் சூடு, அங்கங்கள் தளர்தல், பிரக்ஞையிழத்தல், மேல் சுவாஸம், கடுமையான வாயு வலிகள். மாம்ஸத்தை அலம்பியது போன்ற நீர்கசிதல், எல்லா புலன்களின் உணர்வும் அடங்கிவிடுதல் இவைகள் ஏற்படலாம்*

அடிபட்ட இடத்தில் உணர்வற்றுப் போதல், உடல் கனத்திருத்தல், மயக்கம், குளிர்ச்சியை விரும்புதல், *வியர்வை,

---

இந்த மர்மங்களில் வாக்படரின் மதப்படி குதம், அபஸ்தம்பம், விதுரம், சிருங்காடகம் இவை தமனீ மர்மங்களாகும். விடபம், கக்ஷதரம் விரா மர்மங்களாகும்.

* भ्रमः प्रलापः पतनं प्रमोहो विचेष्टनं संतपनोष्णता च ।
स्रस्तांगता मूर्च्छनमूर्ध्ववातस्तीव्रा रुजो वातकृताश्च तास्ताः ॥
मांसोदकाभं रुधिरं च गच्छेत् सर्वेन्द्रियार्थोपरमस्तथैव ।
दशार्धसंख्येष्वपि हि क्षतेषु सामान्यतो मर्मसु लिङ्गमुक्तम् ॥
(ஸுச்ருத—ஸூத்ர. 25 அத்யாயம்.)

மூர்ச்சை, வாந்தி. பெருமூச்சு இவைகளை மர்மத்தில் அடி உண்டாக்கும்.[1] இவை பொதுவான குறிகள்.

ஸத்ய: பிராணஹர மர்மங்களில் அடிபட்டால் புலனுணர்ச்சிகள் மறைதல், மனத்தடுமாற்றம், புத்தித்தடுமாற்றம், கடுமையான வலி முதலியவை ஏற்படும். காலாந்தர பிராணஹரத்தில் உடன் ரக்தம் முதலிய தாதுக்களின் க்ஷயம் ஏற்படும். தாது க்ஷயம் அளவிற்கு மீறும்போதும் வலியினாலும் மரணம் ஏற்படலாம்.[2]

மாம்ஸமர்மத்தில் அடிபட ஓயாது மெல்லிய மாம்ஸம் கழுவிய ஜலம் போல ரத்தம் கசியும். உடல் மஞ்சள் கலந்த வெளிர் நிறத்தை யடையும். புலன் உணர்வு மங்கும். காலத்தில் ஸரியான சிகித்ஸை யில்லாவிடில் மரணம் ஏற்படும்[3]

அஸ்தி மர்மத்தில் அடிபட்டால் மஜ்ஜை கலந்து ரத்தக்கசிவு மெல்லியதாக நடு நடுவே தடைபட்டு ஏற்படும். வலி மிகக் கடுமையாக இருக்கும்.[4]

---

1. देहप्रसुप्तिर्गुरुता संमोहः शीतकामिता ।
स्वेदो मूर्च्छा वमिः श्वासो मर्मविद्धस्य लक्षणम् ॥
(அஷ்டாங்கஸங்கிரஹ சாரீரம் 7.)

2. इन्द्रियार्थेष्वसंवित्तिः मनोबुद्धिविपर्ययः ।
रुजश्च विविधास्तीव्रा भवन्त्याशुहरे हते ।
हते कालान्तरघ्ने तु ध्रुवं धातुक्षयो नृणाम् ।
ततो धातुक्षयाज्जन्तुर्वेदनाभिश्च नश्यति ।
(ஸுச்ருத சாரீரம். 6-வது அத்யாயம்)

3 विद्धेऽजस्रमसृक्स्रावो मांसधावनवत्तनुः ।
पाण्डुत्वमिन्द्रियाज्ञानं मरणं चाशु मांसजे ॥ (அ. ஸ்ரு.)

4. मज्जान्वितोऽच्छो विच्छिन्नः स्रावो रुक्चास्थिमर्मणि ।
(அ. ஸ்ரு.)

ஸ்நாயு மர்மத்தில் உடல் விறைத்து நீளுதல், வலிப்பு, திமிர்த்திருத்தல், கடுமையான வலி, உட்காரவோ நிற்கவோ நடக்கவோ முடியாமை, அங்கவீனம் இவை ஏற்படும்.[1]

தமநீ மர்மங்களில் அடிபட்டால் சப்தத்துடனும் நுரையுடனும் ரக்தம் வெளியாகி பிரக்ஞை தவறும்.[2]

ஸிராமர்மங்களில் அடிபட்டால், கெட்டியாக ஓயாது அதிக அளவில் ரக்தம் பெருகும். ரக்தம் வெளியாக ஆக, நாவரட்சி, தலைசுற்றுதல், பிரமம், பெருமூச்சு, மயக்கம், விக்கல் இவை ஏற்படும்.[3]

ஸந்திமர்மங்களில் அடிபட்டால், முள்—சுனை குத்தியது போல வேதனை, புண்ணுறியதும் முடம், நொண்டியாதல், பலக் குறைவு, அங்க அசைவுத் தடை, கைகால்கள் சூம்பிப் போதல், கணுக்களில் வீக்கம் இவை ஏற்படும்.[4]

## இரு கைகளிலுள்ள மர்மங்கள்.

**1. க்ஷிப்ரமர்மம் :**[5]**—** இது ஸ்நாயு மர்மமாகும், அரை அங்குலப் பருமனுள்ளது. காலாந்தரப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. கையின் கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் நடுவே உள்ளது. இங்கு அடிபட்டால் ஆக்ஷேபகம் (உதறல்) ஏற்பட்டு மரணபர்யந்தமான கெடுதி ஏற்படலாம்.

---

1. आयामाक्षेपकस्तंभाः स्नावजेऽभ्यधिकं रुजा ।
यानस्थानासनाशक्तिः वैकल्यमथवान्तकः । (அ. ஹ்ரு.)

2. रक्तं सशब्दफेनोष्णं धमनीस्थे विचेतसः ।

3. सिरामर्मव्यधे सान्द्रमजस्रं बह्वसृक्स्रवेत् ।
तत्क्षयात्तृड्भ्रमश्वासमोहहिध्माभिरन्तकः ॥

4. वस्तु शूकैरिवाकीर्णे रूढे च कुणिखञ्जता ।
बलचेष्टाक्षयः शोषः पर्वशोफश्च सन्धिजे ॥

5. तत्र हस्तांगुष्ठांगुल्योर्मध्ये क्षिप्रं नाम ।
तत्र विद्धस्याक्षेपेण मरणम् । (ஸுச்ருதர்.)

இந்த மர்மத்தில் கீழ்க்கண்ட உறுப்பகுதிகள் அடங்கியுள்ளன. இது கட்டைவிரல்— ஆள்காட்டி விரல்களின் சலாகை எலும்புகளின் நடுவே உள்ளது.[1] உள்ளங்கை புறங்கைகளுக்குச் செல்லும் சுத்த ரத்தக் குழாய்கள் இங்கே கூடுகின்றன. அவையாவன :—

பஹி:[2] பிரகோஷ்டதமநியின் (முழங்கையிலிருந்து கட்டைவிரலுக்கு நேரே கையின் வெளிப்பகுதியில் வரும் ரத்தக் குழாய்) சலாகா பிருஷ்டிகா எனும் கிளைகளும் மற்ற கிளைகளும்.[3]

உள்ளங்கையில் வில்போன்று வளைந்து ஆழ்ந்து நிற்கும் கம்பீர—கரதல தாதுஷீ எனும் ரத்தக் குழாய்.[4]

கட்டைவிரலை வெளியிழுக்கும் தசைநார்.[5]

கட்டைவிரலை உள்புறமாக மடிக்கும் தசைநார்.[6]

கை நடு நரம்பின் விரல்பகுதிக் கிளை.[7]

சலாகைகளின் நடுவிலுள்ள தசை.[8]

இவையாகும்.

இந்த இடத்தில் ஏற்படும் அடியால் அதிக ரக்த சேதம் ஏற்படலாம். அல்லது வலிப்பு, திமிர் ஏற்பட்டுக் கேடு விளையலாம்.

2. **தலஹிருதய மர்மம் :**— இது மாம்ஸமர்மம்; காலாந்தர ப்ராணஹரயர்மப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. உள்ளங்கையில் நடுவிரலிற்கு மேலுள்ளது. இங்கு குத்துப்பட, கடுமையான வலி ஏற்பட்டு மரணம் ஏற்படும்.[9]

---

1. Inter metacarpal space.
2. First dorsal metacarpal artery.
3. Branches of the Radial artery.
4. Deep volar arch.
5. Tendon of the abductor pollicis.
6. Tendon of the deep portion of flexor pollicis longus.
7. Digital branches of medium nerve.
8. first dorsal interosseous muscle.
9. मध्यमांगुलीमनुपूर्वेण मध्ये हस्ततलस्य तलहृदयं नाम। तत्रापि रुजाभिर्मरणम्।

அமைப்பு :— உள்ளங்கையின் நடுவே கீழ்க்கண்ட உறுப்புப் பகுதிகள் கூடுமிடமாகும்.

உள்ளங்கையில் வில் போன்று வளைந்துள்ள ரத்தக் குழாயின் உள் வெளிக் கிளைகள்,[1]

உள்ளங்கைத் தசைநார்கள்.[2]

கட்டைவிரலை விரிக்கச் செய்யும் தசை.[3]

கட்டைவிரலை மடக்கும் சிறிய தசை.[4]

சலாகைகளின் நடுவிலுள்ள தசைகள்.[5]

விரற்பகுதிகளை வளைக்கும் அட்டை போன்ற தசைகள்.[6]

இதில் அடிபட்டு வேதனை மிகுந்து திமிர் ஏற்பட்டோ அதிக ரக்தக் கசிவாலோ மரணம் ஏற்படலாம். ரக்த சேதம் ஏற்படாவிடினும், திமிர் ஏற்படா விடினும் மரணம் ஏற்படாது.[7]

க்ஷிப்ரத்திலும்[8] தலஹ்ருதயத்திலும் அடிபட்டு அதிக ரக்த சேதம் ஏற்படின் கைகளை மணிக்கட்டிற்குக்கீழ் வெட்டி எடுக்க

1. Deep and Superficial volar arch.
2. Palmer apponeurosis.
3. Abductor pollicis.
4. flexor pollicis brevis.
5. Inter ossei muscles.
6. Lum bericales.

7. आममर्मविद्धोऽपि नरः छेदभेदादिपीडितः ।
अतिनिःसृतरक्तश्च सद्यस्त्यजति जीवितम् ।
अतोऽन्यथा जीवति तु विद्धः शरशतैरपि ।

8. क्षिप्रेषु तेषु सतलेषु हतेषु रक्तं
गच्छत्यतीव पवनश्च रुजं करोति ।
एवं विनाशमुपयान्ति हि तत्र विद्धाः
वृक्षा इवायुधविघातनिकृत्तमूलाः ॥

तस्मात्तयोरभिहतस्य च पाणिपादं छेत्तव्यमाशु मणिबन्धनगुल्फदेशे ।
छिन्नेषु पाणिचरणेषु सिरा नराणां संकोचमीयुरसृगल्पमतो निरेति ।
प्राप्यामितव्यसनमुग्रमतो मनुष्याः संछिन्नशाखतरुवन्निधनं नयन्ति ॥

வேண்டியிருக்கலாம். அதனால் ரக்தக் குழாய்கள் சுருங்கி ரக்தக் கசிவு தடைபடும். கைகளின் வெட்டுப்பட்டப் பகுதி சுருங்கிக் காய்ந்து விடும். உயிருக்கு ஆபத்து ஏற்படாது.

**3. கூர்ச்ச மர்மம் :—** க்ஷிப்ர மர்மத்திற்கு நேர் மேல் பாகத்தில் இது அமைந்துள்ள ஸ்நாயு மர்மம். வைகல்யகர மர்மப் பிரிவைச் சேர்ந்தது. நான்கு அங்குல நீளமுள்ளது. இதில் அடிபட கைகள் உதறல் சுழலுதல் ஏற்படும்.[1]

***அமைப்பு :—*** கை விரல்களின் அடி சலாகை எலும்புகளுக்கும் கூர்ச்சாஸ்திகளுக்கும் பொருத்தம் ஏற்படுத்தும் தசைநார்கள் இதில் முக்கியத்துவம் பெறுகின்றன.

கட்டைவிரலை நீட்டச் செய்ய நீண்ட தசைநார்.[2]

விரல்களை நீட்ட உதவும் குறுகிய தசைநார்.[3]

ஆள்காட்டி விரலை நீட்டும் தசைநார்.[4]

மணிக்கட்டை நீட்ட உதவும் தசைநார்.[5]

மணிக்கட்டை வளைக்க உதவும் தசைநார்.[6]

கையின் கட்டைவிரல் புறத்து (வெளிப்புறத்து) சுத்த ரக்தக்குழாயும் அதன் சலாகா பிருஷ்டா என்னும் கிளையும்.[7]

சலாகை எலும்புகளின் நடுவே உள்ள தசைகள்.[8]

கையிலுள்ள கூர்ச்சாஸ்திகளுக்கும் சலாகாஸ்திகளுக்கும் உள்ள பூட்டுகள்.[9]

---

1. क्षिप्रस्योपरिष्टादुभयतः कूर्चोनाम।
   तत्र हस्तस्य भ्रमणवेपने भवतः। (ஸு. சா.)
2. Tendon of extensor Pollicis longus.
3. Tendon of extensor degetorum Communis.
4. Tendon of extensor Irdicis proprius.
5 Tendon of extensor carpi Radialis longus.
6. Tendon of the flexor Carpo Radialis Brevis.
7. Radial artery and its branches: first dorsal meta. corpal artery.
8. Interossious muscles.
9. Carpometacarpal and Inter metacarpal articulations.

இவை இம்மர்மவமைப்பில் கூடுபவையாகும். இவ்வமைப்பைக் கவனிக்கும்போது இதில் ஏற்படும் அடியினால் உள்ளங்கையிலுள்ள நீண்ட எலும்புகளான சலாகாஸ்திகளுக்கும் குட்டை எலும்புகளான கூர்ச்சாஸ்திகளுக்கும் அவைகளை இயக்கும் தசைகளுக்கும் தசைநார்களுக்கும் ஆபத்து ஏற்பட்டு பூட்டுகள் குலைந்தோ தசைநார்கள் விலகியோ நசுங்கியோ பூட்டுகள் தளர்ந்து உதறல் வலி ஏற்படுவதன் காரணம் புலப்படும்.

4. **கூர்ச்ச சிரஸ் மர்மம் :—** மணிக்கட்டின் கீழ் இரு ஓரங்களிலும் உள்ள ஸ்நாயு மர்மம். ருஜாகரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடி ஏற்பட கடுமை வலியும் வீக்கமும் ஏற்படும்.[1]

**அமைப்பு ; –** மணிக்கட்டுப் பூட்டின் இருபுறங்களிலுமுள்ள தசைநார்கள்[2] இதில் முக்கியப் பங்கு பெறுகின்றன. இங்கு கூடும் உறுப்புகள் பின்வருமாறு—

உள்ளங்கை சலாகாஸ்தி நடுவே உள்ள தசைநார்.[3]

உள்ளங்கையில் குறுக்கே செல்லும் தசைநார்.[4]

சுண்டுவிரலுக்கு நேரே கையின் உட்புறத்தில் வந்து சேரும் ரத்தக்குழாய்.[5]

கை நடுவே வந்து சேரும் நரம்பு, கை உட்புற நரம்பின் மேற்புறத்துக் கிளைகள்.[6]

சலாகை எலும்புகளின் பூட்டுகள்.[7]

சிறு சிறு எலும்புகளும் அதன் பூட்டுகளும் பூட்டுகளை ஸ்திரப்படுத்தும் தசைநார்களுமாக உள்ள விடமாதலாலே ஸுலபமாக பூட்டு நழுவுதல், எலும்பு தடம்புரளுதல் போன்ற கெடுதி ஏற்பட்டு வலி மிகவும் ஏற்படும். மறுபடியும் தன் நிலைக்கு வந்தாலன்றி வீக்கம் வலி முதலியவை குறையாது.

---

1. मणिबन्धसन्धेरध उभयतः कूर्चशिरो नाम । तत्र रुजाशोथौ ।
2. Ulnar and Radial collatral ligaments. [(ஸு. சா.)
3. Intercarpal ligaments.
4. Transverse carpal ligaments.
5. Ulnar artery.
6. Median nerve and superficial branches of the ulnar nerve.
7. Intercarpal articulations.

5. **மணிபந்தமர்மம்** :—மணிக்கட்டு என்னும் ஸந்தி மர்மம். வைகல்யகர மர்மப் பிரிவைச் சேர்ந்தது. இரண்டு அங்குல இடத்தில் அமையப் பெற்றது. கையும் முன்கையும் சேருமிடத்திலுள்ள பூட்டு இது. இங்கு அடிபட்டால் வலி, கைகளில் தளர்ச்சி, கூழை முதலிய உபத்திரவங்கள் ஏற்பட்டு அங்கவீனம் ஏற்படும்.[1]

**அமைப்பு** :— மணிக்கட்டு எனப்படும் இப்பூட்டு மர்மத்தில் முன்னங்கையின் இரு நீட்டெலும்புகளும் உள்ளங்கையிலுள்ள குத்தெலும்புகளும் சேர்கின்றன. இச்சேர்க்கையில் பங்கு பெறுபவைகளான அந்த:பிரகோஷ்டாஸ்தி, பஹி:பிரகோஷ்டாஸ்தி எனப்படும் இரு முன்கை நீட்டெலும்புகளின் மணிக்கட்டு பிரதேசத்திலுள்ள முனைகளைப் பிணைக்கும் தசைநார்கள்.[2]

மணிக்கட்டின் உட்புறத்தைப் (அந்தப் பிரகோஷ்டாஸ்தியின் முனையுடன்)பிணைக்கும் தசைநார்[3]

மணிக்கட்டு முழுவதையும் கட்டும் தசைநார்.[4]

மணிக்கட்டின் வெளிப்புறத்தை பஹி:பிரகோஷ்டாஸ்தியுடன் பிணைக்கும் தசைநார்[5]

இவை இங்கு அடிபடுவதால் கேடடைகின்றன. பூட்டு நழுவுதல், பூட்டிலுள்ள எலும்பு முறிவு, பூட்டுகளில் ஒன்றின் மேல் மற்றொன்று ஏறிக்கொள்ளுதல் முதலிய கேடுகள் விளைந்து சரியான சிகித்ஸை ஏற்படாவிடில் கைகூழையாகவே ஆகிவிடலாம்.

6. **இந்திரபஸ்திமர்மம்** :— முன்னங்கையின் நடுவில் உள்ள மாம்ஸ மர்மமாகும். காலாந்தரப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்

---

1. हस्तप्रकोष्ठयोः संधाने मणिबन्धो नाम ।
   तत्र रुजः स्तब्धहस्तता कुणित्वं । (ஸு. சா. 6.)
2. Radio ulnar ligaments.
3. Ulnar collatral ligaments.
4. Radio carpal ligaments.
5. Radial collatral ligaments.

தது. இரண்டு அங்குல அளவுள்ளது.[1] இங்கு அடிபட அதிக அளவில் ரத்தக்கசிவு ஏற்பட்டு மரணம் உண்டாகும்.[2]

**அமைப்பு :—** முன்னங்கையின் நடுவிலே அங்குள்ள தசைகள் வெகுவாக விரிந்து சுருங்கி திரண்டு நிற்குமிடம். உள் அந்த: பிரகோஷ்ட—பஹி:பிரகோஷ்ட தமனிகள் நரம்புகள் சேருமிடமானதால் ரக்தக்கசிவும் கைகளில் இயக்கக் குறைவும் ஏற்படலாம். இங்கு கூடும் உறுப்புகள் பின்வருமாறு—

பஹி:பிரகோஷ்ட தமனி எனும் ரக்தக் குழாயின் வில் போன்று வளைவும் அதிலிருந்து கிளம்பும் கிளைகளும்.[3]

அந்த: பிரகோஷ்டதமனியின் வில்வளைவும் அதன் கிளைகளும்.[4]

மத்ய பிரகோஷ்ட நரம்புகளின் கிளைகள்.[5]

கையைப் பிரட்டும் தசை.[6]

விரல்களை மடக்கும் தசை.[7]

மணிக்கட்டை உட்புறம் வளைக்கும் தசை.[8]

ரக்தக் குழாய்களிலும் நரம்புகளிலும் அடிபடுவதால் ரக்தக்கசிவு தடுக்கப்படாவிடில் மரணம் ஏற்படுத்தக் கூடியது.

7. **கூர்ப்பரமர்மம் :—** இது முழங்கைப் பூட்டிலுள்ளது. ஸந்தி மர்மப் பிரிவைச் சேர்ந்தது. வைகல்யகரமாகும். 3 அங்

---

1. போஜரும் கயதாஸரும் இரண்டு அங்குலம் என்றும் மற்ற ஆசார்யர்கள் அரை அங்குலம் என்றும் கூறுவர்.

2. हस्तं प्रति प्रकोष्ठमध्ये इन्द्रबस्तिर्नाम ।
तत्र शोणितक्षयेण मरणम् । (ஸு. சா. 6.)

3. Radial artery with its volar branches.

4. Volar interosseonus branches of the ulnar artery.

5. Branches of mediam nerve.

6. Pronator teres.

7. Flexor digitorum sublimis.

8. Flexor carpiradialis.

குலப் பருமனுள்ளது. இதில் குத்துப்பட கை கூழையாகின்றது.[1]

**அமைப்பு :—** இதன் அமைப்பில் பங்கு கொள்பவை பின் வருமாறு:—

பூட்டுகளைச் சுற்றியிருக்கும் ஜவ்வுப் பை.[2]

முன்னங்கையின் வெளிப்புற எலும்பின் தசைக் கயிறு.[3]

முன்னங்கையின் உள்புற எலும்பின் தசைக்கயிறு.[4]

முழங்கைப் பூட்டைச் சுற்றி வளையங்களாக உள்ள தசை நார்கள்.[5]

இந்தப் பூட்டில் ஏற்படும் தாக்குதல் முன்னங்கையை மடித்து நீட்டும் செயலுக்குக் கேடு விளைவிக்கின்றது. முழங்கைப் பூட்டைப் பூட்டி இயக்கும் தசைநார்கள் வலுவிழப்பதால் கை கூழையாகி அங்கவீனம் ஏற்படுகின்றது.

8. **ஆணி மர்மம் :—** முழங்கைக்கு மூன்று அங்குலம் தள்ளி மேற்புறத்தில் இருபுறமும் உள்ள ஸ்நாயு மர்மம், வைகல்யகரமர்மப் பிரிவைச் சேர்ந்தது. மூன்று அங்குலப் பரப்பு உள்ளது. இங்கு அடிபட வீங்கி கை ஸ்தம்பித்து வேலை செய்யமுடியாது போகும்.[6]

**அமைப்பு :—** இதன் அமைப்பில் புஜத்தின் இருதலைத் தசையின்[7] இருதலைகளும் முக்கியப் பங்கு பெறுகின்கிறன. மற்றும் பாஹ்வீ தமனீ[8]

---

1. प्रकोष्ठप्रगण्डयोः सन्धाने कूर्परं नाम तत्र कुणिः। (ஸு. ச. 6.)
2. Articular capsule.
3. Radial collatral ligament.
4. Ulnar ligament.
5. Annular ligament.
6. कूर्परादुर्ध्वमुभयतस्त्र्यंगुलं आणी नाम।
   तत्र शोफाभिवृद्धिः स्तब्धबाहुता च। (ஸு. ச. 6.)
7. Biceps.
8. Arteria profunda Brachei.

புஜத்தின் நடுவே வரும் நரம்பு[1]

அந்த:பிரகோஷ்ட நரம்பு[2]

பாஹி:பிரகோஷ்ட நரம்பு[3]

புஜத்தின் இருதலைத் தசை[4]

புஜத்தின் மூன்று தலைத் தசை[5]

தோள் வளையின் காக்கை மூக்கு போன்ற முண்டிலிருந்து புஜத்தின் நடுவில் வந்து சேரும் தசை.[6]

கைகளை இயக்கும் முக்கியத்தசைகளும் தசைகளை இயக்கும் நரம்புகளும் அமைந்திருக்கும் இவ்விடத்தில் அடிபட்டால் தசைகள் கெட்டுக் கடுமையான வீக்கமும், நரம்புகள் கெட்டு இயக்கம் தடைபடுவதும் ஏற்படுகின்றது.

9. **பாஹ்வீ மர்மம்** :— ஆணீ மர்மத்தின் மேற்புறத்தில் புஜத்தின் நடுவிலுள்ள சிராமர்மம். வைகல்யகர மர்மப் பிரிவைச் சேர்ந்தது. ½ அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட ரக்தக்குழாய் தாக்கப்பட்டு ரக்தசேதம் உண்டாகி கை காய்ந்து விடும்.[7]

*அமைப்பு* :— இதன் அமைப்பில் புஜத்தின் பிரதான சுத்த அசுத்த ரத்தக் குழாய்கள்[8] முக்கியமாக பங்கு பெறுகின்றன. மற்றும் புஜத்தின் நடுவே வரும் நரம்பு.[9]

முன்னங்கையின் அந்த:பிரகோஷ்ட நரம்பு.[10]

---

1. Median nerve.
2. Ulnar nerve.
3. Radial nerve.
4. Biceps Brachei muscle.
5. Triceps Brachei muscle.
6. Coraco Brachialis.
7. बाहुमध्ये बाह्वी नाम मर्म ।
   तत्र शोणितक्षयात् बाहुशोषः । (ஸு. சா. 6.)
8. Brachial artery and vein.
9. Median nerve.
10. Ulnar nerve.

பஹிஃப்பிரகோஷ்ட நரம்பு[1]

புஜத்தின் இருதலைத் தசை[2]

ஸிரை தமனிகளில் அடிபடுவதால் அவை சிதைவுற்று ரத்தம் அதிக அளவில் வெளியாகி கை சூம்பி விடும். நரம்புகளில் அடிபடுவதால் கை வற்றிவிடும்.

**10. லோஹிதாக்ஷ மர்மம் :—** பாஹ்வீ மர்மத்திற்குமேல் கக்ஷாஸந்திக்குக் கீழ் புஜத்தின் மேல் பக்கத்திலுள்ள ஸிரா மர்மம், வைகல்யகரப்பிரிவில் சேர்ந்தது. அரை அங்குலப் பருமன் உள்ளது. இதில் அடிபட ரக்தக்ஷயம், பக்ஷாகாதம், கை சூம்பிப்போதல், இளைப்பு இவை ஏற்படும்.[3]

இந்த மர்ம அமைப்பில் கீழ்க்கண்ட உறுப்புகள் பங்கு கொள்கின்றன.

பாஹு தமனீ.[4]

கக்ஷாதர தமனீ.[5]

மத்யப்பிரகோஷ்ட நரம்பு.[6]

அந்தப்பிரகோஷ்ட நரம்பு.[7]

மார்பை மறைக்கும் தசை பெரியது.[8]

மார்பை மறைக்கும் சிறிய தசை.[9]

**11. கக்ஷதரமர்மம் :—** மார்பிற்கும் கக்கத்திற்கும் நடுவே உள்ள ஸ்நாயுமர்மம்.[10] வைகல்யகர மர்மப்பிரிவைச் சேர்ந்

---

1. Radial nerve.
2. Biceps brachei muscles.
3. बाह्वोः ऊर्ध्वमधः कक्षासन्धेर्बाहुमूले लोहिताक्षं नाम । तत्र लोहितक्षयेण पक्षाघातो बाहुशोषो वा ।
4. Brachial artery.
5. Axillary artery.
6. Median nerve.
7. Ulnar uerve.
8. Pectoralis major.
9. Pectoralis minor.
10. வாக்படர் இதனை ஸிராமர்மம் என்கிறார். இங்கு ஸிரைகளைவிட தசைநார்களே அதிக முக்யத்வம் பெற்றுள்ளன எனக் கருத இடமிருக்கிறது.

தது. ½–1 அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட பக்ஷா காதம் ஏற்படும்.[1]

இதன் அமைப்பில் பங்கு கொள்பவையாவன :

அக்குளில் செல்லும் நரம்புப் பின்னல்.[2]

அக்குள் சுத்த ரத்தக்குழாய்.[3]

அக்குள் அசுத்த ரத்தக்குழாய்.[4]

மார்பை மூடும் சிறிய தசையின் கயிறு.[5]

மத்யப்பிரகோஷ்ட நரம்பின் முடிச்சு.[6]

அந்தப்பிரகோஷ்ட நரம்பு.[7]

இங்கு அடிபடுவதால் அந்தக் கையின் இயக்கம் போய் விடும்.

இந்தப் பதினொரு மர்மங்கள் ஒவ்வொரு கையிலுமுள்ளவை. ஆக கைகளில் இருபத்திரண்டு மர்மங்கள்.

இதேபோல கால்கள் ஒவ்வொன்றிலும் பதினொரு மர்மங்கள் உள்ளன. அவை பின் வருமாறு :—

1. **க்ஷிப்ரமர்மம் :—** காலின் கட்டை விரலுக்கும் அதை அடுத்துள்ள விரலுக்கும் நடுவில் உள்ள ஸ்நாயுமர்மம் காலாந்தர ப்ராணஹர மர்மப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. இதில் அடிபட வலிப்பு ஏற்பட்டு மரணம்வரை கெடுதல் ஏற்படும்.[8]

---

1. वक्षःकक्षयोर्मध्ये कक्षधरं नाम । तत्र पक्षाघातः ।

2. Brachial Plexus [Lateral Median and Posterior cords.]

3. Axillary artery.

4. Axillary vein.


5. Tendon of the Pectoralis minor.

6. Median nerve.

7. Ulnar nerve.

8. तत्र पादांगुष्ठांगुल्योर्मध्ये क्षिप्रं नाम मर्म । तत्र विद्धस्याक्षेपेण मरणम् ।

## கால்களிலுள்ள மர்மங்கள்.



(அ) க்ஷிப்ரம், (ஆ) கூர்ச்சம். (இ) கூர்ச்சசிரஸ், (ஈ) ஜாநு, (உ) ஆணீ, (ஊ) ஊர்வீ. (எ) லோஹிதாக்ஷம், (ஏ) விடபம்.

இதன் அமைப்பில் காணுபவையாவன :—

கட்டைவிரலை மடக்கும் தசைநார்.[1]


கட்டைவிரலை வெளிப்புறமாக நகர்த்தும் தசைநார்.[2]

கட்டைவிரலுக்கு வரும் நரம்புகள் பின்னல்.[3]

கட்டைவிரலுக்கு வரும் ரத்தக்குழாய் பின்னல்.[4]

கட்டைவிரலுக்கு மேல்புறமுள்ள சலாகை எலும்பின் அடியில் வரும் ரத்தக்குழாய் [5]

கணுக்கால் முன்புற நரம்பின்கிளை.[6]



தலஹ்ருதயம்.

**2. தலஹ்ருதய மர்மம் :—** கால் நடுவிரலுக்கு நேர்கோட்டில் உள்ளங்காலின் நடுவில் உள்ள மாம்ஸமர்மம். காலாந்தர ப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குல பரிமாணமுள்ளது இங்கு அடிபடக் கடுமையான வலியால் மரணமீருன கெடுதி ஏற்படும்.[7]

இது உள்ளங்காலின் வளைவின் நடுவிலே[8] அமைந்துள்ளது.

இங்குள்ள முக்யப் பகுதிகளாவன :—

உள்ளங்கால் வளைவு தமநீ.[9]

உள்ளங்கால் நரம்புகள் [10]

---

1–2. Combined Tendon of Abductor hallucis and Flexor hallucis brevis.

3. Bifercation of first Common digital nerve.

4–5. Bifercation of first Dorsal metatarsal Artery.

6. Deep Peroneal Nerve.

7. मध्यमांगुलीमनुपूर्वेण मध्ये पादतलस्य तलहृदयं नाम । तत्रापि रुजाभिर्मरणम् ।

8. Centre of the Planter side

9. Lateral planter artery.

10. Medial and Lateral planter nerve.

உள்ளங்கால் தசைநார் விரிப்பு.[1]

கட்டைவிரலை வெளியிழுக்கும் தசையின் குறுக்கான தலை.[2]

உள்ளங்கால் நான்குகோண தசை.[3]

விரல்களை மடக்கும் தசை.[4]

இது வலியும் திமிரும் மிகுந்து உபத்திரவிக்கும் இடம்.

**3. கூர்ச்சமர்மம் :—** இது க்ஷிப்ரமர்மத்தின் மேலும் கீழும் உள்ளது. ஸ்நாயுமர்மம். வைகல்யகரப்பிரிவைச் சேர்ந்தது. நான்கு அங்குல நீளமுள்ளது. இங்கு அடிபட கால் உதறுதலும் சுழலுதலும் ஏற்படும்.[5]

இதன் அமைப்பில் உள்ளவையாவன :—

கூர்ச்ச – சலாகா எலும்புகளைப் பிணைக்கும் ஸ்நாயுக்கள்.[6]

விரல்களை நீட்டச்செய்யும் தசை (சிறியது)[7]

உள்ளங்கால் ரத்தக்குழாய்.[8]

விரல்களை நீட்டச்செய்யும் நீள் தசையின் முனை.[9]

கணுக்கால் வெளிப்புற நரம்புகளின் கிளைகள்.[10]

கட்டைவிரலை நீட்டச்செய்யும் நீள் தசை முனை.[11]

மூன்று தலையுள்ள கணுக்கால் வெளிப்புறத் த்சையின் முனை.[12]

---

1. Long planter ligament.
2. Oblique head of Abductor hallucis.
3. Quadratus planter muscle
4. Flexor Digitorum Brevis.

5 क्षिप्रस्योपरिष्टादुभयतः कूर्चो नाम। तत्र पादस्य भ्रमणवेपने भवतः।

6. Tarso-Metatarsal and Inter tarsal ligament.
7. Extensor digitorum brevis.
8. Dorsal pedis artery.
9. Tendon of Extensor digitorum longus.
10. Branches of Deep peroneal nerve.
11. Tendon of Extensor hallucis longus.
12. Tendon of peroneal tertius.

உள்ளங்கால் தமனிகள் [1]

விரல்களை விரிக்கும் சிறுதசையின் முனை [2]


**4. கூர்ச்சசிரஸ் மர்மம் :—**

கணுக்கால்பூட்டின் கீழ் இருபுறமும் உள்ள ஸ்நாயு மர்மம். வைகல்யகரப் பிரிவைச் சேர்ந்தது. ஒரு அங்குல பரிமாணமுள்ளது. இங்கு அடிபட வலி வீக்கம் ஏற்படும்.[3]

இதன் அமைப்பில் கணுக்காலின் இருபுறங்களிலுள்ள பூட்டுக்கயிறுகள்[4] முக்கியமாயுள்ளன. இவைகளில் ஏற்படும் தாக்குதல் கணுக்காலின் கீழும் கணுக்காலிலும் வீக்கத்தை உண்டாக்குகின்றன. மற்றும் உள்ள உறுப்புகளாவன:—

கணுக்கால் முன்னுள்ள தடித்த தசை நார் [5]

கணுக்காலைச்சுற்றியுள்ள வளையஸ்நாயுக்கள் (கங்கணிகா ஸ்நாயு [6])




குல்பம் — (பாதம்)

**5. குல்பமர்மம் பாதம் :—** கணுக்கால்பூட்டிலுள்ள ஸந்தி மர்மம். வைகல்யகரமர்மப்பிரிவைச் சேர்ந்தது. இரண்டு அங்குலப்பருமனுள்ளது. இங்கு அடிபட வலி, பாதம் ஸ்தம்பித்து


---

1. Dorsal inter tarsal artery.
2. Tendon of extensor digitorum brevis.
3. गुल्फसन्धेरध उभयतः कूर्चशिरो नाम । तत्र रुजाशोफौ ।
4. Deltoid ligaments, Talo calcaneal, and Calcaned febular ligament.
5. Tendon of Tibialis anterior.
6. Annular ligament.

அசைக்கமுடியாதிருத்தல், நொண்டி நடத்தல், இவை ஏற்படும்.[1]

இதன் அமைப்பில் கணுக்காலின் இருபுறத்தெலும்புகளும் கீழே ஒன்றோடொன்று உட்புறமாகச்சேர்தல், இவ்விரண்டும் பாதகூர்ச்சாஸ்திகளுடன் சேர்தல்[2] இவை முக்கியமாக இடம் பெறுகின்றன. இவைகளைத்தவிர கணுக்கால் பூட்டின் தசைநார்களும்[3] திரிகோண உருவில் உள்ள குல்பஸந்தியும் முக்கியமாக கவனிக்கத்தக்கவை. இதில் அடிபட பூட்டுகள் விலகுவதோ எலும்புகள் உடைவதோ ஏற்படலாம்.

**6. இந்திரபஸ்தி மர்மம் :—** கணுக்கால் பூட்டிற்கும் முழங்காலுக்கும் நடுவேயுள்ள கீழ் கால் பகுதியின் நடுவில் (ஜங்காஸ்தியின் நடுவில்) உள்ள மாம்ஸமர்மம் ஆடுசதைப் பகுதியிலுள்ளது. காலாந்தரப்ராணஹரமர்மம் அரை அங்குலப் பருமனுள்ளது.[4] இங்கு அடிபட தசைகளிலுள்ள ஸிரைகள் தமனிகள் நசுங்கி ரத்தக்கசிவு ஏற்பட்டு வீக்கம் இசிவு மரணமீறான உபத்திரவங்கள் ஏற்படலாம்.



இந்திரபஸ்தி

இதன் அமைப்பில் கெண்டைச் சதைகள் மூன்றும்[5] அவைகளின் கீழ் செல்லும் தமனிகளும்[6] கணுக்கால் பின் புறத்து நரம்பும்[7] இருக்கின்றன.

இதன் அமைப்பிற்குட்பட்டவை யாவன :—

---

1. पादजंघयोः सन्धाने गुल्फो नाम। तत्र रुजः स्तब्धपादता खञ्जता वा।

2. Inferior Tibio fibular articulation, Ankle joint;

3. Medial Malleolus, Anterior longus, Deltoid ligament, Posterior ligament, Anterior talo fibular ligament, Posterior talo calcaneal ligament; Fibulo calcaneal ligament, Lateral talo calcaneal ligament.

4. पार्ष्णि प्रति जंघामध्ये इन्द्रबस्तिर्नाम। तत्र शोणितक्षयेण मरणम्।

5. Gastronemius, Soleus, Plantaris.

6. Paroneal and posterior tibial artery.

7. Tibial nerve

அரை இடுக்கிலுள்ள சுரங்க வழி [1]

அவ்வழியே செல்லும் சுக்ரக்குழாய் [2]

சுக்ரப்பிரபிகா எனும் கோசமும் அதைச்சுற்றியுள்ள ரத்தக் குழாய்களும் [3]

அண்டகோசத்திற்குச் செல்லும் ரத்தக்குழாய்களும் நரம்புகளும் [4]

இதில் அடிபட அண்டகோசத்தினுள் சுரக்கும் சுக்கிலம் ஆண்குறிக்கு வந்து சேர்வதில் தடையும் நரம்பு பலவீனமும் தளர்ச்சியும் ஏற்படும். பெண்களுக்கு இவ்விடத்தில் பீஜகோசங்கள் [5] இருப்பதும் குறிப்பில் கொள்ளத்தக்கது.

ஆக ஒவ்வொருகாலிலும் பதினொன்று பதினொன்றாகக் கால்களில் 22 மர்மங்கள் உள்ளன. இவைகளுடன் கைகளில் கண்ட இருபத்திரண்டு மர்மங்களையும் சேர்த்து சாகாகத மர்மங்கள் 44 ஆகின்றன.

7. **ஜானுமர்மம்:—** முழங்காலிலுள்ள ஸந்திமர்மம். வைகல்யகரமாகும். மூன்று அங்குல பரிமாணமுள்ளது. இங்கு அடிபட்டால் கால் நொண்டியாகும்.[6]

இதன் அமைப்பிலுள்ளவையாவன:—

பூட்டைச்சுற்றியுள்ள நார் கவசம் [7]

பூட்டைத் திடப்படுத்தும் தசைநார்கள் [8]

இவைகளில் அடிபடும்போது ஸ்நாயுக்கள் அறுபட்டு பூட்டுகள் தளர்ந்து இயக்கம் தடைபடுகின்றது.

---

1. Inguinal canal.
2. Spermatic cord.
3. Ductus deferens.
4. Testicular artery, Vein & Nerve.
5. Ovary.
6. जंघोर्वोः सन्धाने जानु नाम । तत्र खञ्जता ।
7. Articular capsule.
8. Ligamentum patellae, oblique popliteal, Ligament, Medeal meniscus, Lateral meniscus, Anterior and Posterior crucial ligament, Tibial collatral ligament, Fibular Collatral ligament, transverse ligament, coronary ligament.

8. **ஆணி மர்மம் :—** முழங்காலிலிருந்து மூன்று அங்குலம் மேல் இருபுறமும் உள்ள ஸ்நாயு மர்மமாகும். வைகல்யகரமாகும். அரை அங்குலப்பருமனுள்ளது. இங்கு அடிபட வீங்கும். ஸ்தம்பித்து அசைக்க முடியாதிருக்கும் [1]

இதன் அமைப்பிலுள்ளவையாவன :—

நான்கு தலையுள்ள துடைத்தசை [2]
ஊருதண்டிகா எனும் தசை [3]
துடையை நீட்டும் மூன்று தசைகள் [4]
முழங்கால் பூட்டிற்கு வரும் ரத்தக்குழாய்கள்
துடை நரம்பு. [5]

9. **ஊர்வீமர்மம் :** துடையின் நடுவிலுள்ள ஸிராமர்மம். வைகல்யகரமாகும். ஒரு அங்குலப்பருமனுள்ளது. இங்கு அடிபட ரத்தம் வெளியேறி துடை கால் சூம்பிவிடும். [6]

இதன் அமைப்பில் உள்ளவை துடையின் ரத்தக்குழாய்களும் நரம்புகளுமாகும். [7]

10. **லோஹிதாக்ஷ மர்மம் :** ஊர்வீக்குமேல் அரை இடுக்குக்குக் கீழ் துடையின் ஆரம்பத்தில் உள்ள ஸிராமர்மமாகும். வைகல்யகரப்பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப்பருமனுள்ளது. இதில் அடிபட ரத்த க்ஷயம் ஏற்பட்டு அந்தப் பக்கம் வீழ்தல் (பக்ஷவதம்), கால்கள் இளைத்தல் இவை ஏற்படும். [8]

---

1. जानुन ऊर्ध्वमुभयतः त्र्यंगुलमाणीनाम मर्म । तत्र शोफाभिवृद्धिः स्तब्धता च ।
2. Quadriceps Femoris.
3. Rectus Femoris.
4. Vastus (intermedius, lateral, medius)
5. Femoral Nerve.
6. ऊरुमध्ये ऊर्वी नाम । तत्र शोणितक्षयात् सक्थिशोषः ।
7. Femoral Artery, Vein & Nerve (Adductor canal)
8. ऊर्व्या ऊर्ध्वमधो वंक्षणस्योरुमूले लोहिताक्षं नाम । तत्र लोहितक्षयेण पक्षाघातः सक्थिशोषो वा ।

இதன் அமைப்பு துடைத்திரிகோண[1] அமைப்பில் அடங்கி யுள்ளது. ஊர்வியிலுள்ளதுபோல் துடையின் ரத்தக்குழாய் களும் நரம்புகளும் இதில் அமைந்துள்ளன.

**11. விடபமர்மம்:** அரை இடுக்கில் அண்டகோசத்திற்கும் அரைஇடுக்கிற்கும் நடுவே உள்ள ஸ்நாயுமர்மம் வைகல்யகரமா கும். ஒரு அங்குல பரிமாணமுள்ளது. இதில் அடிபட சுக்கில க்ஷயம் அல்லது நபும்ஸகத்தன்மை ஏற்படும்.[2]

## நடு உடல் மர்மங்கள்

### உதர மர்மங்கள்

1. **குதமர்மம்:-** மலத்தையும் வாயுவையும் வெளியேற்றும் பெருங் குடலின் கடைசிப்பகுதியிலுள்ள மாம்ஸமர்மம், ஸத் யஃபிராணஹரப்பிரிவைச் சார்ந்தது. இதன் நீளம் நான்கு அங்குலங்கள். இங்கு அடிபட உடன் மரணபரியந்தமான கெடுதல் ஏற்படும்.[3]

இதன் அமைப்பில் கீழ்க்கண்ட அங்கங்கள் சேர்கின்றன.

குதஸங்கோசனி எனும் குதத்தைச்சுருக்கும் தசைகள்.[4]

குதத்தைத் தாங்கும் தசை[5]

குதவெளியிலுள்ள நரம்பு மண்டலம்[6]

குதத்திலுள்ள ரத்தக்குழாய்கள்[7]

இங்கு அடிபட முதலில் திமிர் ஏற்பட்டு குதவாய் மூடி உபத்ரவங்கள் ஏற்படும்

---

1. Femoral Triangle.

2. वंक्षणवृषणयोरन्तरे विटपं नाम, तत्र षाण्डयं अल्पशुक्रता वा भवति।

3. तत्र वातवर्चो निरसनं स्थूलान्त्रप्रतिबद्धं गुदं नाम मर्म। तत्र सद्यो मरणम्।

4. External & Internal Sphincter Ani Muscles.

5. Levator Ani.

6. Inferior Hemorrhoidal Nerve Plexus.

7. Inferior Hemorrhoidal Artery & Vein.

2. **பஸ்திமர்மம் :**

**2.** இடுப்பின் முன்புறத்தில் நடுவே அமைப்பில் சிறித ளவிலே தசையும் ரக்தமும் கொண்டதும் கடிகபாலாஸ்தியின் நடுப்பொருந்துவாய்க்கு நேர் பின்னர் உள்ள பஸ்தி ஸ்நாயு மர்ம மாகும். இதுவும் ஸத்யஃபிராணஹரமாகும். நான்கு அங்குல நீளமுள்ளது.[1]

பஸ்தியின் அமைப்பைக் கவனிக்கையில் அதன் மேற்புறத் தில் உதரகுஹையைச் சுற்றி மூடியுள்ள உதராவரண கலை[2] வந்து சேர்கின்றது. இங்கு பிளவு ஏற்பட்டால் பஸ்தியில் சேரும் மூத்திரம் உதரகுஹைக்குள் சுரந்து அங்கு, திமிர்வலி முதலியவைகளை ஏற்படுத்தி விஷவேகம் போல் கடுமையாகத் தொடர்ந்து மரணமேற்படுகின்றது. பஸ்தியின் இருபுறங்களி லும் கீழும் பிளப்பு ஏற்பட்டால் ச்ரோணி குஹையில்[3] மூத்தி ரம் சுரந்து அங்கும் அதேபோல உபத்திரவங்கள் ஏற்படுகின் றன. எதிர்பாராமல் அல்லது அடி முதலியவைகள் ஏற்படுவ தால் பஸ்தி பிளந்தால்தான் இவ்வுபத்திரவங்கள் ஏற்படுகின் றன. ஆனால் பஸ்தியை ஒரு சல்யசிகித்ஸகன் அச்மரிக்காகப் பிளந்து சிகித்சை செய்தால் அங்கு உடன் மூத்திரம் வெளி யிலே பரவாதிருக்கத் தகுந்த முன்னேற்பாடுகள் இருக்குமாத லால் அவ்வப்போது இவ்வுபத்திரவங்கள் ஏற்படுவதில்லை. அங்கும் இருபுறங்களிலும் பிளப்புக்கு அவசியமேற்பட்டால் பிழைப்பது சிரமமே.

**3. நாபி மர்மம் :—** பக்வாசயத்திற்கும் ஆமாசயத்திற்கும் நடுவே நாபி எனும் மர்மம். தாயின் கர்ப்பவாஸ காலத்தில் இங்கு சிசுவிற்கும் தாய்க்கும் உள்ள ரத்தக்குழாய் தொடர்பு இருந்தது. அந்த தாயின் சிரைகள் பிரிக்கப்பட்டு பின்னர் தொப்புள் கொடி காய்ந்து போன இடம். கீழே பஸ்தியும் மேலே இருபுறங்களில் யகிருத்தும் ப்லீஹமும் பின்னர் சிறு குடல் பெருகுடல் பகுதிகளும் பின்னர் நரம்பு மண்டலத்தைத் தாங்கும் ஸுஷும்னா காண்டமுமாக இந்த இடம் உடலில் ஒரு முக்கிய கேந்திரமாகின்றது. இதிலுள்ள முக்ய ரத்தக்குழாய்

---

1. अल्पमांसशोणितोऽभ्यन्तरतः कट्यां मूत्राशयो बस्तिर्नाम। तत्रापि सद्योमरणम् अश्मरीव्रणादृते। तत्राप्युभयतो भिन्ने न जीवति। एकतो मूत्रस्रावी व्रणो भवति। स तु यत्नेन रोहति।

2. Peritoneum. 3. Pelvic Cavity.

ஆமாசயத்தைச் சுற்றிச்செல்லும் ரத்தக்குழாய்களின் பகுதிகள்.[1] இது ஸிராமர்மம். ஸத்யஃபிராணஹரப் பிரிவினைச் சேர்ந்தது. நான்கு அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட மூல அவயவங்களில் ஏற்படும் சேதம் காரணமாக ரத்தப்பெருக்கு மிகுந்து திமிர் வலி முதலியவைகளால் மரணபர்யந்தமான உபத்திரவங்கள் ஏற்படுகின்றன.[2]

இந்த மூன்றும் உதரமர்மங்களாகும்.

## உரோமர்மங்கள்

**1. ஹிருதயமர்மம்:—** இரு ஸ்தநங்களின் நடுவே சிறிது இடதுபுறத்தில் தள்ளி நிற்கும் ஹிருதயம் ஸிராமர்மம். ஸத்யஃபிராணஹரப்பிரிவைச் சேர்ந்தது. நான்கு அங்குல பருமனுள்ளது. ரக்தஸஞ்சாரத்தின் முக்கியஸ்தானமாக இருப்பதுடன் மனதின் ஸத்வ ரஜஸ் தமஸ் குணங்களுக்கும் முக்யஸ்தானமாக உள்ளது. இங்கு அடிபட உடன் மரணம்.[3] இந்த இடம் ஆமாசய த்வாரத்திற்கு வெகு ஸமீபமாக உள்ளது.

**2. ஸ்தநமூல மர்மம்:—** இருஸ்தநங்களுக்கும் இரண்டங்குலம் கீழே உள்ள இரு மர்மங்கள் ஸிராமர்மமாகும். காலாந்தரப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தவை. இங்கு அடிபட புப்புஸங்களில் கபம் நிறைந்து காஸச்வாஸங்களால் பிராண பயம் ஏற்படும்.[4] இதனால் குறிப்படப்படும் இடம் புப்புஸங்களின் ஆதாரஸ்தலமாகும்.[5] இங்கு அடிபட கடுமையான உரக்ஷதம், ச்வஸனக ஜ்வரம் முதலியவை ஏற்படும்.

**3. ஸ்தநரோஹித மர்மம்:—** மார்பின் இருபுறமும் முலைக் காம்பிற்கு இரண்டங்குலம் மேலே உள்ள மாம்ஸ மர்மம்.

---

1. Coeliac Axis - Left epigastic Artery & Vein.

2. पक्वामाशययोर्मध्ये सिराप्रभवा नाभिर्नाम। तत्रापि सद्योमरणम्।

3. स्तनयोर्मध्यमधिष्ठायोरस्थामाशयद्वारं सत्वरजस्तमसामधिष्ठानं हृदयं नाम। तत्रापि सद्य एव मरणम्।

4 स्तनयोरधस्ताद्व्यंगुलमुभयतः स्तनमूले नाम मर्मणी। तत्र कफपूर्णकोष्ठतया कासश्वासाभ्यां म्रियते।

5. Base of the Lungs.

காலாந்தரப் பிராணஹரப் பிரிவைச்சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது.[1] இங்கு அடிபட புப்புஸத்தில் கபம் நிறைந்து காஸச்வாஸங்களில் மரண பரியந்தமான கெடுதி ஏற்படும்.

இந்த மர்ம அமைப்பில் பல உருப்புகள் அடங்கியுள்ளன.

விலாவெலும்புகளின் நடுத்தசைகள்.[2]

புப்புஸத்தின் முக்கியப் பகுதி — ச்வாஸ நாடி.[3]

மூச்சுவிட உதவும் நரம்பு.[4]

பிராணத நாடீ. [5]

ஹிருதயத்திலிருந்து புப்புஸம் செல்லும் பெரு ரத்தக் குழாய். [6]

ஹிருதயத்திலிருந்து வெளியாகும் மஹாதமனி இறங்கும் பகுதி.[7]

புப்புஸ ரத்தக்குழாய்கள், ரஸாயனிகள், ரஸக்ரந்திகள். [8]

புப்புஸ நரம்புகள்.[9]

**4. அபலாப மர்மம் :—** இரு தோள்வளைகளுக்கும் கீழே கக்கத்தின் பக்கத்தில் மார்பகத்தின் வெளிப்புறத்தில் இவை உள்ளன. ஸிராமர்மங்கள் காலாந்தரப்ராணஹரப் பிரிவினைச் சேர்ந்தவை. இங்கு அடிபட ரக்தம் கசிந்து சீழாகி பிராண

---

1. स्तनचूचुकयोरूर्ध्वं द्व्यंगुलमुभयतः स्तनरोहितौ नाम। तत्र लोहित पूर्णकोष्ठतया कासश्वासाभ्यां म्रियते।

2. Inter-costal Muscle.

3. Bronchus.

4. Phrenic Nerve.

5. Vagus nerve Posterior.


6. Superior Vena Cava.

7. Descending Aorta.

8. Pulmonary, Artery, Vein, Lymphatic Vessels, lymph glands.

9. Pulmonary Plexus.

நாசம் வரையுள்ள உபத்திரவங்கள் ஏற்படும். அரை அங்குலப் பருமனுள்ளது.[1]




1. அபலாபம்
2. அபஸ்தம்பம்
3. ஸ்தநரோஹிதம்
4. ஹிருதயம்
5. ஸ்தநமூலம்
6. குகந்தரம்
7. பஸ்தி
8. நாபி

இதன் அமைப்பில் பங்குகொள்பவையாவன :—

மேற்கைக்கு வரும் நரம்புகள்[2]

கக்கத்திற்குச் செல்லும் ரத்தக்குழாய்கள், ரஸாயனிகள்[3]

தோள்வளையும் மூடும் தசைக்குச்செல்லும் ரத்தக்குழாய்கள்[4]

**5. அபஸ்தம்பமர்மம்**

மார்பின் இருபுறங்களிலுமுள்ள இருநாடிகள். ஸிராமர்மம். காலாந்தர ப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப்

---

1. अंसकूटयोरधस्तात्पार्श्वोपरिभागयोरपलपौ नाम। तत्र रक्तेन पूयभावं गतेन मरणम्।
2. Brachial Plexus.
3. Axillary Artery, Vein & Lymphatic Vessels.
4. Thoraco Acromial Artery.

பருமனுள்ளது. இங்கு அடிபட மார்பகத்தில் காற்று நிரம்பி காஸ ச்வாஸங்கள் ஏற்பட்டு மரணம்வரை உபத்திரவங்கள் உண்டாகும்.[1]

இதன் அமைப்பில் பங்குகொள்பவை:—

ச்வாஸ நாடிகள்[2]
பிரச்வாஸ நரம்புகள்[3]
பிராணதா நரம்புகள்[4]
மஹாமாத்ருகா தமனீ[5]
அக்ஷதராசிரா[6]

மார்பகத்தின் இருபக்கங்களிலுமுள்ள இந்த மர்மங்களுக்கு ச்வாஸாசயச்செயலில் பூர்ணமான பங்கு உண்டு. ச்வாஸாசயத்தில் அடிபட்டு பிராணவாயு ஸ்தம்பிப்பதால் காஸ ச்வாஸங்கள் ஏற்பட்டோ, தமனி சிரைகளில் அடிபட்டு ரத்தம் நிரம்பி காஸச்வாஸங்கள் ஏற்பட்டோ இங்கு மரணம் ஏற்படும்.[7]

---


1. उभयत्रोरसो नाड्यौ वातवहौ अपस्तंभौ नाम। तत्र वातपूर्णकोष्ठतया कासश्वासाभ्यां मरणम्। (ஸுச்ருதம்.)

शोणित पूर्णकोष्ठतया कासश्वासाभ्यां मरणम्। (வாக்படர்.)

2. Bronchus.
3. Phrenic nerve.
4. Vagus nerve.
5. Common carotid artery.
6. Sub clavian vein.


7. மார்பகத்திலுள்ள மர்மங்களில் 'ஹிருதய மர்ம'த்தைத் தவிர ஸ்தனரோஹிதம், ஸ்தனமூலம், அபலாபம், அபஸ்தம்பம் ஆகிய மர்மங்கள் அனைத்தும் புப்புஸத்துடன் ஸம்பந்தப்பட்டவையே. ஸ்தன மூலத்தில் அடியால் புப்புஸத்தில் கபம் நிரம்பியும், ஸ்தனரோஹிதத்தில் அடியால் ரக்தம் நிரம்பியும், அபலாபத்தில் அடியால் ரக்தம் சீழாக மாறியும், அபஸ்தம்பத்தில் அடியால் வாயு (ரக்தம்) நிரம்பியும் மரணம் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. அபஸ்தம்பங்களை சுவாஸகோசம் எனக் கூறுவது உண்டு. ச்வாஸகோசத்தில் பிராணவாயு ஸ்தம்பமோ, புப்புஸாவரண கலையில் வாயு நிரம்பியோ (Penumo thorax) கபம் நிரம்பியோ (Pneumonia முதலியவை) ரக்தம் நிரம்பியோ (Haemo thorax –

ஆக குதம், பஸ்தி, நாபி, ஹிருதயம், ஸ்தனமூலங்கள் இரண்டு, ஸ்தநரோஹிதங்கள் இரண்டு, அபலாபங்கள் இரண்டு, அபஸ்தம்பங்கள் இரண்டு என பன்னிரண்டு மர்மங்கள் வயிறு— மார்பு பக்கங்களில் உள்ளவையாகும்.


குதமர்மம்

## பிருஷ்ட மர்மங்கள்.

1. **கடீகதருணம் :—** முதுகுத்தண்டெலும்பின் இருபுறங்களிலும் இடுப்பெலும்பில் உள்ளவை. அஸ்திமர்மம், காலாந்தர ப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமன் உள்ளது. இங்கு




1. கடீகதருணம்
2. நிதம்பம்
3. பிருஹதீ
4. அம்ஸபலகம்
5. அம்ஸம்

அடிபட்ட மனிதனுக்கு ரக்த க்ஷயத்தால் பாண்டு, நிறம் மங்குதல், உடல் இளைப்பு முதலியவை ஏற்பட்டு மரணம் ஏற்படும்.[1]

---

Haemoptysis) சீழ் நிரம்பியோ (Empyema) ஏற்படும் நோய் நிலைகள் புப்புஸத்தின் மேல் ஏற்படும் அடியால் ஏற்படுபவை.

1. तत्र पृष्ठवंशमुभयतः प्रतिश्रोणिकाण्डमस्थिनो कटीकतरुणे नाम मर्मणी। तत्र शोणितक्षयात् पाण्डुर्विवर्णो हीनरूपश्च म्रियते।

இடுப்பெலும்பின் (ஜகனகபாலம்) பின்புறத்து ஏற்றமுள்ள பகுதி,[1] அங்கு வரும் ரத்தக்குழாய்கள்,[2] திரிகாஸ்தியையும் ஜகனகபாலத்தையும் இணைக்கும் கட்டு நார்கள்.[3] இவை இங்கு முக்கியமாக உள்ள அவயவங்கள்.

2. **குகுந்தரம்** :— இடுப்பெலும்பும் திரிகாஸ்தியும் சேரும் இடத்தில் வெளிப்புறத்தில் உள்ள சிறிது பள்ளமான பாகம் ஸந்திமர்மமாகும். வைகல்யகரப் பிரிவைச் சார்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட இடுப்பிற்குக் கீழுள்ள பாகத்தில் செயல் குன்றி உணர்வு மறத்துவிடும்.[4]

இதன் அமைப்பில் கிருத்ரஸீ[5] நரம்பு திரிகநாடீ சக்கிரத்தி லிருந்தும் கிளம்பி இடுப்பு குஹைக்குள் புகுமிடம். கிருத்ரஸீ நரம்பு, திரிக நரம்புகள் அடிபடும்போது இடுப்புக் கீழ் இயக்கம் தடைபடுவதும் உணர்விழப்பதும் ஏற்படுகின்றது.

3. **நிதம்பமர்மம்** :— இடுப்பெலும்பின் இருபுறங்களிலும் விலாப்புறத்தில் ஏற்றமுள்ள பகுதியும் இடுப்பு — உதர குஹையில் அடங்கியுள்ள ஆசயங்களுக்குப் பாதுகாப்பளிப்பது மான அஸ்திமர்மம். காலாந்தர ப்ராண ஹரப் பிரிவைச் சேர்ந்தது; அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட இடுப்பு உதரகுஹைகளின் நரம்புகள் அடிபட்டு இடுப்புக்குக் கீழ் உள்ள அங்கங்கள் சூம்பி துர்பலம் ஏற்பட்டு மரணம் ஏற்படும்.[6]

4. **பார்ச்வஸந்திமர்மம்** :— இடுப்பிற்கும் விலாப்புறத் திற்குமிடையே இருபுறங்களிலும் குறுக்கிலும் மேலும் கீழு மாகவும் உள்ள பகுதி. ஸிராமர்மமாகும். காலாந்தர

---

1. Ilium – posterior aspect.
2. Common iliac artery & vein.
3. Sacro iliac ligament.
4. पार्श्वजघनबहिर्भागे पृष्ठवंशमुभयतो नातिनिम्ने कुकुन्दरे नाम मर्मणि, तत्र स्पर्शाज्ञानमधःकाये चेष्टोपघातश्च ।
5. Sciatic nerve.
6. श्रोणिकाण्डयोरुपर्याशयाच्छादकौ पार्श्वोत्तरप्रतिबद्धौ नितंबौ नाम, तत्राधःकायशोषो दौर्बल्याच्च मरणम् ।

ப்ராணஹரமர்மமாகும். அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட விலாப்புறங்களிலே குடலிலும் ரத்தக்கசிவு மிகுந்து புடைத்து மரணம் ஏற்படும்.[1]

விலாவின் இருமருங்கிலும் கீழே உள்ள தொங்கும் விலா வெலும்புப் பகுதிகளும் விருக்கத்திலிருந்து வரும் ரத்தக்குழாய் களும் இதன் அமைப்பில் அடங்குகின்றன.

5. **பிருஹதீமர்மம் :—** ஸ்தநமூல மர்மத்தின் நேர் பின்புறத்தில் முதுகுத்தண்டி (ப்ருஷ்டவம்சம்) ன் இருபுறங்களிலும் உள்ள ஸிராமர்மம். காலாந்தர ப்ராணஹரம். அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கும் ரக்தக்குழாய்கள் அடிபட்டு ரக்தம் மிகுந்த அளவில் சேதமாகி மரணம் ஏற்படுகின்றது.[2]

இதன் அமைப்பில் பங்கு கொள்பவை :—

வலப்புறத்தில் யகிருத்தின் ரக்தக்குழாய்கள்[3]

இடப்புறத்தில் ப்லீஹத்தின் ரக்தக்குழாய்கள்[4]

6. **அம்ஸபலகமர்மம் :—** முதுகின் மேல்புறத்தில் பிருஷ்ட வம்சத்தையொட்டி திரிகத்தில் சேரும் தோள்பட்டை எலும்பு களாகிற அஸ்திமர்மம். வைகல்யகரப் பிரிவில் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது இங்கு அடிபட கைகள் மரத்துச் சூம்பிப்போகும்.[5]

இதன் அமைப்பில் பங்குகொள்பவை :—

அம்ஸபலகம் — தோள்பட்டை[6]

---

1. अधः पार्श्वान्तर प्रतिबद्धौ जघनपार्श्वमध्ययोस्तिर्यगूर्ध्वं च जघनात् पार्श्वसन्धिर्नाम । तत्र लोहितपूर्णकोष्ठतया म्रियते ।

2. स्तनमूलादृजूभयतः पृष्ठवंशस्य बृहत्यौ नाम । तत्र शोणितातिप्रवृत्तिनिमित्तैरुपद्रवैः म्रियते ।

3. The Vessels at the hilum of liver.

4. The Vessels at the hilum of spleen.

5. पृष्ठवंशमुभयतस्त्रिकसंबद्धे अंसफलके नाम । तत्र बाह्वोः स्वापशोषौ ।

6. Scapula.

தோள்பட்டையிலுள்ள தசைகளை இயக்கும் நரம்புகள்.

தோள்பட்டை — தசைகளுக்கு புஷ்டி தரும் ரத்தக் குழாய்கள்.

7. **அம்ஸமர்மம்:—** கை, கழுத்து இவைகளைப் பிணைத்துள்ள தோள் பிரதேசத்தின் கட்டு நார் பகுதி. ஸ்நாயுமர்மமாகும். வைகல்யகரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குல கனமுள்ளது. இங்கு அடிபட கைகள் ஸ்தம்பித்து இயங்க முடியாமல்போகும்.[1]

இதில் பங்கு கொள்பவை :—

தோள்பட்டை எலும்பின் காக்கை மூக்குப் பகுதியையும் தோள் எலும்பையும் தோள்பட்டையையும் பிணைக்கும் கட்டு நார்கள்.[2]

அசைவு மிகுதியுள்ள பகுதியான தோள் பகுதியில் தோள் பூட்டைக் காப்பாற்றும் கட்டுநார்கள் அடிபட்டு பலமிழப்பதால் கைகள் செயலிழப்பது இங்கு ஏற்படும் கெடுதியாகும்.

ஆக கடீக தருணங்கள் இரண்டு, குகுந்தரங்கள் இரண்டு, நிதம்பங்கள் இரண்டு, பார்ச்வஸந்திகள் இரண்டு, பிருஹதீ இரண்டு, அம்ஸபலகங்கள் இரண்டு, அம்ஸங்கள் இரண்டு என பதினான்கு பிருஷ்டமர்மங்களாகும். இவ்விதம் மத்ய சரீரத்தில் 26 மர்மங்கள் உள்ளன.

### கழுத்திலுள்ள மர்மங்கள்

*நீலா — மந்யா ;—* தொண்டைக் குழாயின் இருபக்கங்களிலும் தாடையின் அடிப்பக்கத்தில் பக்கத்திற்கு ஒன்றாக நீலா என்று இரு தமனிகளும் மந்யா என்று இரு தமனிகளும் உள்ளன. இவை ஸிராமர்மங்கள்.[3] வைகல்யகரப் பிரிவினைச்

---

1. बाहुमूर्धग्रीवामध्ये अंसपीठस्कन्धनिबन्धनावंसौ नाम, तत्र स्तब्धबाहुता ।

2. Ligaments - coraco clavicular, conoid, trepezoid, superior Acromeco - clavicular, coraco acrominal.

3. ஸிராமர்மப்பிரிவைச் சேர்ந்ததாயினும் இவைகளில் ரக்தக்குழாய்கள் மட்டும் முக்கியத்துவம் கொண்டதாக நினைக்க முடியவில்லை. ஸுச்ருதர் இவைகளை தமனிகள் எனக்குறிப்பிடு

சார்ந்தவை. நீளம் நான்கு அங்குலங்கள். ஊமை, தொண்டைக்குரல் மாறுதல், மணம் உணராமை முதலியவை இதில் அடிபடுவதால் ஏற்படுகின்றன.[1]

இவைகளின் அமைப்பில் பங்குகொள்பவை:

மஹாமாத்ருகா எனும் சுத்தரக்தக்குழாய்கள்[2]

அனுமன்யா எனும் அசுத்த ரத்தக்குழாய்கள்[3]

ஸ்வரயந்திரத்திற்குச் செல்லும் நரம்பு[4]

தொண்டை நாக்கிற்குச் செல்லும் நரம்பு[5]

நாக்கின் அடியில் செல்லும் நரம்பு[6]

நாக்கின் அடியில் செல்லும் ரக்தக்குழாய்கள்[7]


---

வதில் விசேஷ தாத்பர்யமுண்டு. ஸுச்ருதரின் பரிபாஷைப்படி தமனிகள் ஸம்ஜ்ஞா சேஷ்டாவாஹிகளான நரம்புகளாகும். ரக்தக்குழாய்களல்ல. ஸுச்ருதரின் பிரிவுப்படி இவை ஸிரா மர்மங்களாயினும் இவை அடிபடுவதால் ஏற்படும் ஊமைத் தன்மை முதலியவை சேஷ்டாநாசத்தையே குறிப்பிடுவதால் ரக்தக்ஷயம் போன்ற ஸிராவ்யத லக்ஷனங்கள் காணாததாலும் அமைப்பில் ஸிரைகளின் முக்கியத்துவமும் ஸ்தான பலத்தால் தமனிகளின் முக்கியத்துவமும் இங்கு உணரப்பட வேண்டுமென் பதையே ஸுச்ருதரின் தமனி என்ற சொல் குறிப்பிடுகின்றதாகக் கொள்ள இடமிருக்கிறது. வாக்படர் ஸிரைகள் என்றே குறிப்பிடுவது அமைப்பைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

1. तत्र कण्ठनाडीमुभयतश्चतस्रो धमन्यो द्वे नीले द्वे मन्ये व्यत्यासेन । तत्र मूकता स्वरवैकृतं अरसग्राहिता च । (ஸுச்ருதர்)

कण्ठनाडीमुभयतः सिरा हनुसमाश्रिताः ।
चतस्रस्तासु नीले द्वे मन्ये द्वे मर्मणी स्मृते ॥ (வாக்படர்)

2. Carotid artery.
3. Jugular vein.
4. Superior glossal nerve.
5. Glasso pharyngeal nerve.
6. Hypoglossal nerve.
7. Sub lingual Blood vessels.




மேல் இடது— 1. மாத்ருகா 2. நீலா-மந்யா 3. பணம் 4. சங்கம் 5. ஆவர்தம் 6. உத்க்ஷேபம் 7. சிருங்காடகம் (தலையின் பின்புறத்திலும் உத்க்ஷேபத்தின் கீழும் உள்ள வளையங்கள்) 8. விதுரம்.

மேல் வலது - 1. பணம் 2. அபாங்கம் 3 ஸ்தபநீ. 4. உத்க்ஷேபம்.
கீழ் இடது- 1. அதிபதி 2. கிருகாடிகா. கீழ் வலது- 1. ஸீமந்தம்.

**மாத்ருகா மர்மம்**

இவை கழுத்தின் இருபுறங்களிலுமுள்ள பக்கத்திற்கு நான்காக எட்டு ஸிரைகளாகும். ஸத்யஃபிராணஹர மர்மங்கள். நான்கு அங்குல நீளமுள்ளவை. இங்கு அடிபட ரக்தக்குழாய்கள் அறுந்து உடன் மரணம் ஏற்படும்.[1]

இதன் அமைப்பில் மஹாமாத்ருகாவும் அனுமன்யாஸிரையும் மற்றுமுள்ள கழுத்துப்புறத்திலுள்ள முகத்திற்குச் செல்பவையும் அங்கிருந்து திரும்புபவையுமான ரக்தக் குழாய்கள் இடம் பெறுகின்றன.[2]

**கிருகாடிகா மர்மம்:** தலையும் கழுத்தும் சேருமிடம் கிருகாடிகா எனும் இரு மர்மங்கள் உள்ளன. ஸந்தி மர்மமாகும். வைகல்யகரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட தலையாட்டம் ஏற்படும்.[3]

இதன் அமைப்பில் முதுகுத்தண்டின் மேல் உள்ள முதலிரண்டு வளைய எலும்புகளும் தலையின் அடிபாகமும் சேருமிடம் பங்கு கொள்கின்றன.

முதுகுத்தண்டின்மேல் முதல் இரண்டு எலும்புகளும் இரண்டாவது எலும்பின் முள்போன்று நீட்டிக்கொண்டிருக்

---

1. ग्रीवामुभयतश्चतस्रश्चतस्रः सिरामातृकाः । तत्र सद्यो मरणम् ।
कण्ठनाडीमुभयतो जिह्वानासागताः सिराः ।
(ஸுச்ருதர்)
पृथक्चतस्रः ताः सद्यो घ्नन्त्यसून्मातृकाह्वयाः ॥ (வாக்படர்)

2. நீலா-மந்யா-மாத்ருகா இந்த மர்மங்களின் பங்கு கொள்ளும் அங்கங்களின் நிர்ணயத்தில் மூலக்ரந்தங்களிலும் விவரணகாரர்களின் குறிப்புகளிலும் மதபேதம் உண்டு. இவைகள் ஸ்தானமான மந்யா (மென்னி) பிரதேசம் மிகவும் ஜாக்ரதையாகக் காப்பாற்றவேண்டிய மர்மஸ்தானம் என்பதுதான் கவனிக்கத்தக்கது. நீலா-மந்யா இவ்விரண்டும் மென்னியிலுள்ள நரம்புகளையும் மாத்ருகா ஸிரைகளையும் குறிப்பிடுவதாகக் கொள்ளுதல் நல்லது.


3. शिरोग्रीवयोः सन्धाने कृकाटिके नाम । तत्र चलमूर्धता ।

கும் பாகத்தால் சேர்ந்திருப்பது இவைகளுக்கு முக்கியத்துவ மளிப்பதாகும்.[1]

ஆக மந்யா இரண்டு, நீலா இரண்டு, மாத்ருகா எட்டு, கிருகாடிகா 2 என கழுத்திலுள்ள மர்மங்கள் பதினைந்கு.

**தலையிலுள்ள மர்மங்கள்**

***விதுர மர்மம் :*** காதுகளின் கீழே பள்ளத்தில் உள்ள ஸ்நாயு மர்மம். வைகல்யகர மர்மப்பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குல அளவுள்ளது. இங்கு அடிபட செவிடு ஏற்படும்.[2] வலது-இடது புறங்களில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு மர்மங்கள்.



விதுரம்.

இதன் அமைப்பில் பங்கு கொள்பவை :

காதின் பின் புறத்தில் வந்து சேரும் ரத்தக் குழாய்கள்.[3]

காதின் படுதா[4]
உள்காதின் அமைப்பிலுள்ளவை[5]
8வது தலை நரம்பின் கிளைகள்[6]

**பணா மர்மம்.**

மூக்குவழிக்கு இரு புறங்களிலும் உள்பக்கத்தில் துவாரங்களை யொட்டியுள்ள இரு ஸிரா மர்மங்கள் வைகல்யகரப்பிரி


---

1. **Articulation between occipital bone & atlas, and between atlas and Axis.**

2. **कर्णपृष्ठतोऽधः संश्रिते विधुरे नाम । तत्र बाधिर्यम् ।** (ஸுச்ருதர்)
**வாக்படரின் மதப்படி இது தமனீ மர்மமாகும்.**
**अधस्तात्कर्णयोर्निम्ने विधुरे श्रुतिहारिणी ।**

3. Poserior auricular vessels.
4. Tympanum.
5. Structure in the middle ear.
6. Branches of the 8th Cranial nerve.

வினைச் சேர்ந்தவை. அரை அங்குலப்பருமன் உள்ளது. இங்கு அடிபட மூக்கின் மண உணர்வு போய்விடும்.[1]



பணம்.


இதன் அமைப்பில் மூக்கு தொண்டை காது இவைகளை ஒன்றோடொன்று பிணைக்கும் குழாய்[2] மண உணர்ச்சி உண்டாக்கும் கந்தநாடி[3] காதின் சுரங்கவழி[4] மூக்கின் குகை[5] இவையெல்லாம் அடங்கும்.

**அபாங்க மர்மம்**

புருவத்தின் வெளியோரத்தின் கீழே கண்களுக்கு வெளியே கடைக்கண் பிரதேசத்திலுள்ள ஸிரா மர்மம்.[6] வைகல்யகரப் பிரிவைச் சேர்ந்தது. ½ அங்குல அளவுள்ளது. இங்கு அடிபட குருடு, பார்வை மங்குதல் ஏற்படும்.[7]

இதன் அமைப்பில் பங்குகொள்பவை :

1. கன்னம் பொட்டு இவைகளில் ஓடும் ரத்தக் குழாய்கள்[8]
2. கண் நரம்புக் கிளைகள்[9]
3. கண்ணீர் கோள நரம்புக் கிளைகள்[10]
4. கண்புறத்து நரம்பு[11]


அபாங்கமும் ஆவர்த்தமும்

---

1. घ्राणमार्गमुभयतोऽभ्यन्तरतः स्रोतोमार्गप्रतिबद्धे फणे नाम। तत्र गन्धाज्ञानम्। (ஸுச்ருதர்)

फणावुभयतो घ्राणमार्गं श्रोत्रपथानुगौ।
अन्तर्गलस्थितौ वेधात् गन्धविज्ञानहारिणौ। (வாக்படர்)

2. Eustachian Tube. 3. Olefactory nerve. 4. Orifice of auditory tube. 5. Olfactory region of the nasal cavity.

6. வாக்படர் மதப்படி ஸ்நாயுமர்மம்.

7. भ्रूपुच्छान्तयोरधः अक्ष्णोर्बाह्यतः अपांगौ तत्रान्ध्यं दृष्ट्युपघातो वा।

8. Zygomatic & Temporal vessels. 9. Branches of Optic nerve. 10. Lachrymal nerve. 11. Abducens, 6th cranial nerve.

**ஆவர்த்த மர்மம் :** புருவத்தின் மேல் இரு ஓரங்களிலும் பள்ளத்தில் உள்ள ஸந்திமர்மம் ஆவர்த்தம். வைகல்யகரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமன் உள்ளது. இங்கு அடிபட கண் பார்வைக் குறைவோ பொட்டையாவதோ ஏற்படும்.[1]

இதன் அமைப்பில் கண்டாஸ்தி, கபாலாஸ்தியின் முன்னெலும்பு, உள்ளுள்ள ஜதூகாஸ்தி இவைகளின் பூட்டு[2] பங்கு கொள்ளுகின்றது. மூளையின் முன் பகுதியில் பொட்டின் பக்கத்தில் ஜதூகாஸ்தியின் இரு சிறு சிறகுகளும் சேர்கின்றன. இவை கண் கோளக் குகையின் உட்புறத்தில் புலன் படுகின்றன. அதனுல் இதில் ஏற்படும் அடி கண்ணை பாதிக்கின்றது,

**சங்கமர்மம் :—** காதிற்கும் நெற்றிக்கும் நடுவே உள்ள பொட்டு அஸ்திமர்மமான சங்கமர்மமாகும். ஸத்யஃபிராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட உடன் மரணம் ஏற்படும்[3].

இதன் அமைப்பில் சங்காஸ்தியின்[4] காதுப் பக்கத்தை மூடும் பகுதி உள்ளது. மற்றுமுள்ள இங்குள்ள சங்காஸ்தி தமனிகளும்,[5] மூளை தமனிகளும் இதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. சங்காஸ்தி எனும் பொட்டெலும்பும் இவ்விடத்தில் மிகவும் மெல்லியதாக இருப்பதால் லேசான அடிகூட மூளையைத் தாக்கி விடுகின்றது.

**உத்க்ஷேபமர்மம் :—** பொட்டிற்கு மேல் கேசங்கள் முடியுமிடத்தில் உள்ள ஸ்நாயு மர்மம் உத்க்ஷேபமாகும். விசல்யப்ராணஹர வர்க்கத்தைச் சேர்ந்தது. அரை அங்குலப் பருமன்

---

1. भ्रुवोरुपरि निम्नयोरावर्तौ नाम। तत्राप्यान्ध्यं दृष्ट्युपघातो वा।

2. Joints of the Molar frontal and sphenoid bones.

3. भ्रुवोः पुच्छान्तयोरुपरि कर्णललाटयोर्मध्ये शंखौ नाम। तत्र सद्यो मरणम्।

4. Temporal bone.

5. Superficial temporal Artery and middle Meningeal artery.

உள்ளது.[1] இங்கு அடிபட சல்யமுள்ள வரையோ, பழுத்துத் தானே சல்யம் வெளியாகும் வரையோ ஆபத்தில்லை. சல்யத்தைப் பிடுங்கி எடுக்கப் பிராணன் நீங்கும்.

**ஸ்தபநீ மர்மம்** :— இரு புருவங்களுக்கும் நடுவில் ஸ்தபநீ. ஸிராமர்மமாகும். விசல்ய ப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குல பரிமாண முள்ளது. இங்கும் சல்யம் விரணம் பழுத்து தானே விழுந்தாலும் சல்யம் தங்கியிருந்தாலும் ஆபத்தில்லை. சல்யத்தைப் பிடுங்கினால் உயிர் நீங்கும்.[2]

இதன் அமைப்பில் நெற்றி ரத்தக் குழாயும்[3] நெற்றியினுள் உள்ள பொந்துகள் நிரம்பிய குகையும்[4] முக்யமானவை. குகையில் பொத்தல் ஏற்பட்டு ரத்தக் குழாய் உடைந்து நிரம்ப மரணம் ஏற்படும்.

**ஸீமந்தமர்மம்** :—தலை எலும்புகளில் ஒன்றோடொன்று பொருந்துமிடம் ஸீமந்தம் எனப்படும். இவை ஐந்து. ஸந்திமர்மப் பிரிவைச் சேர்ந்தது. நான்கு அங்குல பரிமாண முள்ளது. காலாந்தர ப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தது. இங்கு அடிபட, கிலி பிரமை, மயக்கம் இவைகள் ஏற்பட்டு மரணம் உண்டாகும்.[5]

இதன் அமைப்பில் பங்கு கொள்பவை.

1. மத்ய கபாலத்தின் பொறுத்துவாய்[6]
2. பார்ச்வகபாலங்களின் இரு பொருந்து வாய்கள்[7]
3. பின்புற கபாலத்தின் பொருந்து வாய்கள்[8]

---

1. शंखयोरुपरि केशान्ते उत्क्षेपौ नाम। तत्र सशल्यो जीवति, पाकात्पतितशल्यो वा नोद्धृतशल्यः।

2. भ्रुवोर्मध्ये स्थपनी नाम। तत्रोत्क्षेपवत्।

3. Frontal Vein.

4. Frontal Sinus.

5. पञ्चसन्धयः शिरसि विभक्ताः सीमन्ता नाम। तत्रोन्मादभयचित्तनाशैर्मरणम्।

6. Sagittal Suture.


7. Parietal sutures.

8. Occipital suture.

4. முன் கபாலத்தின் பொருந்துவாய்.[1]

இவைகளில் அடிபடும் போது மூளைக் கலக்கம், வலி, மூளையில் அடி இவை ஏற்பட்டு சேஷ்டா நாசம், ஸம்க்ஞாநாசம் ஏற்படுகின்றது.

**சிருங்காடக மர்மம் :—** மூக்கு, காது, கண், நாக்கு இவைகளுக்காக வரும் ரத்தக் குழாய்கள் கூடுமிடம் நான்கு சிருங்கா




அ. சிருங்காடகம். ஆ. ஆவர்தம்.

டகமர்மங்கள். இவை ஸத்ய: பிராணஹர மர்மங்களாகும். ஸிரா மர்மப் பிரிவைச் சேர்ந்தது.[2] நான்கு அங்குல பரிமாண முள்ளது. அங்கு அடிபட உடன் மரணம்.[3]

மூளையின் அடியில் முக்கோண உருவிலுள்ள இடம் இது. இதில் நேரிடையாக கண்களுக்கு வரும் சிரைகள் சேருகின்றது. தலையின் மேலோ பின்புறத்திலோ தாடையின் மேலோ அடி ஏற்பட கபாலத்தின் அடிப்புறத்திலுள்ள எலும்பு நொருங்கலாம். அப்போது சிருங்காடகம், ஸுஷும்நா காண்டத்தின் தலைப்பகுதி

---

1. Frontal suture.

2. வாக்படர் இதை தமனீ மர்மமாகக் குறிப்பிடுகிறார்.

3. घ्राणश्रोत्राक्षिजिह्वासन्तर्पणीनां सिराणां मध्ये सिरासन्निपातः शृंगाटकानि, तानि चत्वारि, तत्रापि सद्यो मरणम् ।

இவைகளில் அடி ஏற்பட்டு மரணம் ஏற்படலாம். இந்த ஸ்தானத்தில் அடிபடப் பேச்சு கேந்திரம்[1] திருஷ்டி கேந்திரம்,[2] ச்ரோத்ர கேந்த்ரம்,[3] ருசி-மண கேந்திரம்[4] இவைகள் சீர்குலைகின்றன.

**அதிபதி** :— தலைக்குள் மேற்புறத்தில் சிரைகள் ஸந்திகள் சேருமிடம். வெளிப்புறத்தில் தலைமயிர் சுழித்து நிற்குமிடத்திற்கு நேரே உள்ளிருப்பது. ஸந்திமர்மப் பிரிவைச் சேர்ந்தது. ஸத்யஃபிராணஹரமாகும். அரை அங்குல பரிமாண முள்ளது. இதில் அடிபட மரணம் ஏற்படும்.[5]



அதிபதி

இது தலையில் மயிர் சுழித்து நிற்குமிடத்தில் புரடிக்கு மேல் உட்புறத்தில் மூளையின் அடிபாகத்தில் உள்ளது. இங்கு ஐந்து சிரைகள் சேர்கின்றன.[6] இங்கு தான் ஹிருதயம், சுவாஸாசயம் இவைகளை இயக்கும் நரம்பு மண்டலமும் மற்ற தசைகளை இயக்கும் நரம்புகளும் பத்து தலை நரம்புகளும் தோன்றுகின்றன.[7]

ஆக விதுரம் 2, பணம் 2, அபாங்கம் 2, ஆவர்த்தம் 2, உத்க்ஷேபம் 2, சங்கம் 2, ஸ்தபனீ 1, ஸீமந்தம் 5, சிருங்காடகம் 4, அதிபதி 1 என தலையிலுள்ள மர்மங்கள் 23 ஆகும்.

---

1. Buccal centre.
2. Visuo Sensory and Visuo Psychic centre
3. Hearing centre.
4. Taste and Smell centre.
5. मस्तकाभ्यन्तरत उपरिष्टात्सिरासन्धिसन्निपातो रोमावर्तोऽधिपतिः, तत्रापि सद्य एव ।
6. Confluence of sinuses, Torcular herophili.
7. Cardiac centre, Respiratory nerve, Vaso motor centre, Iocranial Nerves.